தொழில்

INDUSTRY

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்

1·7·59

புதிய 25

டெலிபோன்: 85515 தந்தி: கிராண்ட் ஆர்ட்

பாலு சகோதரர்கள்

ஆர்டிஸ்ட்.

★

பீ-பீஸ் அட்வர்டைசிங் சர்வீஸ்

(விளம்பர யோசனையாளர்கள்)

2, தாயார் சாகிப் தெரு, சென்னை-2

★

'கலை'

சினிமா & இலக்கிய மாதப் பத்திரிகை

★

பாலு சகோதரர்கள்-வெளியீடுகள்

புத்தகம் வெளியிடுவோர்

★

அமிர்தம் ஏஜென்ஸீஸ்

வாழ்த்துக்கள் & காலண்டர் அச்சிடுவோர்

130 & 131, தாயார் சாகிப் தெரு, சென்னை-2.

★

காந்தி ஐய்யா ஸ்டுடியோ

போட்டோ என்லார்ஜ்மெண்டுகளும் வர்ண சித்திரங்களும் வரைபவர்கள்

6, லலிதாபுரம் தெரு, சென்னை-14.

தொழில்

MADRAS 7—59

இந்த இதழில்

புதுக் கோட்டையின் புதிய பொறுப்பு (தலையங்கம்) ... 3
கேரளாவில் ஒரு இட்லர்? ... 5
சுமதியின் சபதம்:-தொடர் நாவல். ... 17
சிறுவர்களின் எதிர்காலம் கட்டுரை. ... 33
தமிழ் நாட்டின் நார்மன் ராக்வெல்லர்கள். ... 38
சிறு தொழில்கள் இன்றேல் பெரும் தொழில்கள் இல்லை ... 41
ஒர் ஆண்டுக்கு குறைக்கக் கூடாது. ... 47
கலைமணம். தலை கொடுத்தான் தம்பி சினிமா விமர்சனம் ... 59

இந்து பத்திரிகை ஆசிரியர் மறைவு

ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீநிவாசன், மறைந்த செய்தி சென்னை ராஜ்ய முழுவதும் பரவியது. இந்து பத்திரிகை சிறப்பைப் பற்றி சொல்லத் தேவை இல்லை; உலகிலே சிறந்த பத்திரிகையாகத் தொண்டாற்றி வருகிறது இந்து பத்திரிகை. அதன் ஆசிரியர் ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீநிவாசன், பத்திரிகை துறையில் தமிழ் நாட்டிற்கு ஒரு மாபெரும் செல்வாக்கை வாங்கித் தந்தவர், அவர் இறந்த செய்தியைக் கேட்டதும், மந்திரிகளும், அந்நிய பிரமுகர்களும், வருகை தந்து தங்கள் கடைசீ மரியாதையை செலுத்தினார்கள். அவர் மறைவு தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய நஷ்டமாகும்; அவர் குடும்பத்திற்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மைசூர் ராஜ்ய கூட்டுறவு

மந்திரிகள் மகாநாடு

ராஜ்ய கூட்டுறவு மந்திரிகள் மகாநாடு மைசூரில் ஜூலை 28, 29-ந் தேதிகளில் நடைபெறும்.

யூனியன் சமுதாய அபிவிருத்தி - கூட்டுறவு மந்திராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஒரு தினக் கூட்டத்தில் இப்போது விஸ்தாரணமடைந்துள்ள கூட்டுறவுத் திட்ட நடவடிக்கைகள் சம்மந்தமான நிர்வாக, ஸ்தாபன அமைப்பு ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கப்படும்.

யூனியன் சமுதாய அபிவிருத்தி - கூட்டுறவு மந்திரி, ஸ்ரீ எஸ். கே. டே மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி தலைமையில் மைசூரில் ஜூலை 23-28 தேதிகளில் நடத்தப்படவிருக்கிற வருஷாந்திர சமுதாய அபிவிருத்தி மகாநாட்டைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் ராஜ்ய கூட்டுறவு மந்திரிகள் மகாநாட்டில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி நடத்துவதற்கு சமுதாய அபிவிருத்தி ஸ்தாபனம் ஏற்கக்கூடிய விசேஷ பங்கு பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மக்களது இறுதியான நீதியில் நாம் ஏன் பொறுமையாய் நம்பிக்கை வைக்கலாகாது? அதைவிடச் சிறந்த நம்பிக்கையாவது அதற்கு இணையான நம்பிக்கையாவது உலகத்தில் உண்டோ?

—லிங்கன்.

" அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர்; கே. பெருமாள் உடையார்

தொழில் 2	சென்னை, 1—7—'59	இதழ் 5

புதுக் கோட்டையின் புதிய பொறுப்பு !

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி புதுக்கோட்டையில் இம் மாதம் 28-ந் தேதி நடைபெற இருப்பதை, தமிழ்மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

அரசியலில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் கமிட்டி கூடுகிறது. அரசியல் தெளிவு ஏற்பட அது வழிகாட்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது நியாயமே.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் ஒருங்கேக்கூடி, ஆலோசித்து ஏழைமக்களின் துன்பங்களையும் நடுத்தரமக்களின் அல்லல்களையும் சீர்தூக்கிப்பார்த்து, அவர்களது நல்வாழ்வுக்கு இந்த சிறப்புக்கூட்டம் ஆவன செய்ய வேண்டும்; செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

சில சிக்கலான பிரச்னைகள் நம்மை எதிர்நோக்கி நிற்கின்றன. குறிப்பாக அன்றாட வாழ்வுக்கு இன்றியமையாதவையான உணவுப் பண்டங்களின் விலைகள் என்றுமில்லாத அளவு ஏறிவிட்டன. இதனால் மக்கள் பெரிதும் அல்லலுறுகின்றனர். விலைவாசிகள் குறைய, புதுக்

கோட்டையில் கூடும் காங்கிரஸ் வழிவகுக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். ஏழைமக்கள் வாழ்க்கையில் புகுந்துள்ள அகவிலை இருள் அகற்றப்படவேண்டும்.

208367

சுதந்திரக்கட்சி என்ற ஒருபுது அரசியல் கட்சி உருவாகி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை அதிகப்படுத்தியுள்ளது. த. நா. கா. கமிட்டி காலதாமதம் இல்லாமல் உடனடியாக மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, சோர்ந்திருக்கும் காங்கிரஸ் ஊழியர்கள் மத்தியில் உற்சாகமும், ஊக்கமும் பிறக்க வழிகாட்டவேண்டும். சோர்வு எவ்வளவு சீக்கிரத்தில் அகற்றப்படவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் அகற்றப்பட்டால் அது காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும் நல்லது; பொதுமக்களுக்கும் நல்லது.

புதுக்கோட்டையில் நடக்க இருக்கும் கூட்டம் வெறும் சடங்கு என்ற அளவில் நின்று விடக்கூடாது. கட்சியின் தூண்களாகக் கருதக்கூடிய ஊழியர்களைக்கொண்டு ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அவர்களுக்கென்று ஒருமுகாம் அமைத்துக்கொடுப்பது மிக, மிக அவசியமாகும். த. நா. கா. கமிட்டி இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யாவிடில், ஊழியர்கள் மத்தியில் ஒரு பெரிய சோர்வு குடிகொண்டுவிடும்; பொதுத் தேர்தலில் அவர்கள் வேலைசெய்ய முடியாத அளவு ஒரு பயங்கர சூழ்நிலைமை நிலவும் இந்த நிலைவராமல் தடுப்பது த. கா. கர். கமிட்டியின் கடமை. இது அவசர, அவசியக் கடமை ஆகும்.

சுதந்திரக்கட்சியின் அடிப்படையும் நோக்கமும் மர்மமாகவே இருக்கின்றன. புதுக்கட்சி எப்படி இயங்கப்போகிறது என்பதும் புதிராகவே இருக்கிறது. பணபலம் படைத்தவர்கள் இந்தக் கட்சியை முன் நின்று நடத்தப்போவதாகக் கேள்வி. ஸ்ரீ. ரங்கா இதன் தலைவர். ஸ்ரீ ரங்காவைப் பற்றி நமக்குத் தெரியும். எந்தக்கட்சியை ஸ்ரீ ரங்கா அமைத்தாலும் அந்தக்கட்சி ஒழுங்காக நடைபெறுவதில்லை என்பது ஒவ்வொரு அரசியல் வாதிக்கும் வெட்டவெளிச்சமாகத் தெரிந்த உண்மையாகும். ஆகையால்தான் ரங்கா தலைமையில் இயங்க இருக்கும் இந்தக்கட்சியிலும் விரைவில் பூசல்களும், போட்டிகளும் ஏற்பட்டால் வியப்பல்ல. புதுக்கட்சியை மிகை படுத்தும் நோக்கம் கடுகளவேனும் எங்களுக்கில்லை.

கேரளத்தில் அராஜகம் அத்துமீறிவிட்டது. ஜனநாயகம் அங்கு குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது. சர்வாதி

காரப் தலைதூக்கி நிற்கிறது. இந்த அரசியல் நெருக்கடி மக்களை அச்சுறுத்துகிறது. ஆகவேதான் தென்நாடு, புதிய அரசியல் மோகத்தில் புது அரசியல் கட்சிபற்றி கருத்து செலுத்த நேரிடலாம்.

காங்கிரஸ் எம். பி. க்களும் எம். எல். ஏக்களும், எம். எல் ஸி க்களும், பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி, ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, மண்டல காங்கிரஸ் கமிட்டி முதலியவற்றின் உறுப்பினர்களிடம் நல்லமுறையில் தொடர்பு கொண்டு, ஊழியர்கள் கூறும் அபிப்பிராயங்களை ஏற்று, நடந்தால், உண்மையிலே புதுயகட்சி தமிழ் நாட்டில் சீந்துவாரற்றுப் போகும். காங்கிரஸ் ஊழியர்கள் மத்தியில் புதுஉணர்ச்சி புத்துயிர் பெற்று ஸ்தாபனம் வலுவடையும்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் மனவேதனைப்படாத வண்ணம் காங்கிரஸ் கட்சித்தலைவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே கடந்த காலத்தை மறந்துவிட்டு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, நல்லமுறையில் பணியாற்ற, எல்லாக் காங்கிரஸ் ஊழியர்களுக்கும், உற்சாகம் பிறக்கப்புதிய வழிவகைகளை வகுத்து அவர்கள் மக்கள் மத்தியில் உழைக்க நல்ல வாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

கேரளத்தில் ஒரு ஹிட்லர்!

கேரளாவில் அராஜகம் தலைவிரித்தாடுகிறது. ஜனநாயகம் அங்கு அணு அணுவாக சித்திரவதையாக்கப்பட்டு குழி தோண்டி புதைக்கப்படுகிறது. அந்த கோரதாண்டவம் கட்டுக்கடங்காமல், நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் தினசரி பத்திரிகை மூலம் படிக்கிறோம்; இந்த அராஜக நிலை, கேரளாவில் நிலவுவதைப் பார்த்து நாம் துக்கிக்கின்றோம்; கேரள மாகாணம் முழுவதும், ஒரே குழப்பம்; கொந்தளிப்பு.

ஆயிரக்கணக்கான பேர், மறியல் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள். கம்யூனிஸ்டுக்களின் அராஜரீகப் போக்குக்கண்டு, உள்ளம் குமுறும் மக்களை உள்ளேத் தள்ளுகிறார் கேரள முதலமைச்சர் ஸ்ரீ நம்பூதிரிபாடு.

நம்பூதிரிபாட் ஆட்சியில் தொழிற்சாலைகள், ஜெயில்களாக மாற்றப்படுகின்றன; கொல்லம் பக்கத்தில், குண்டதா என்னும்

டத்தில், ஒரு தொழிற்சாலை சிலமாதங்களாக, மூடப்பட்டு இருந்தது; அந்த தொழிற்சாலை ஜெயிலாக மாற்றப்பட்டுள்ளது. நம்பூதிரிப்பாட்டின் பார்வையில் அது பட்டதும், "ஏன் இதை ஜெயிலாக மாற்றக்கூடாது? எனக்கு விரோதமாக எதிர்ப்பா? எதிர்ப்பவர்கள் அத்தனை பேரையும், ஜெயிலில் தள்ளிவிடுவேன்; ஜெயில் இடம் கொடுக்காது என்று நினைக்காதீர்கள் குண்டரா தொழிற்சாலையை ஜெயிலாக மாற்றிவிட்டேன் என்று அவர் சவால் விடுவது போல் இருக்கிறது :—இந்த தொழிற்சாலையை ஜெயிலாக மாற்றியது.

பெண்கள்கூட கம்யூனிஸ்டு சர்வாதிகாரப் போக்கை எதிர்க்க அணி அணியாக முன்வருகிறார்கள். 34, பெண் தலைவிகள், கம்யூனிஸ்டு சர்வாதிகாரப் போக்கை கண்டித்து கூட்டறிக்கை விட்டுள்ளார்கள்; திருவனந்தபுரம் ஜில்லாவில், கொச்சுவேள, புழுவிலா ஆகிய இரண்டு இடங்களிலும்' மக்கள் மீது, கம்யூனிஸ்ட் சர்க்கார், காட்டு மிராண்டித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால், 5 பேர் தலத்தில் மாண்டு போய்விட்டார்கள். 10 பேர் கடுங்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள்; இந்த அடாத செயலைக்கண்டிக்கத்தான் மேற்கண்ட 34 பெண் தலைவர்கள் முன்வந்துள்ளார்கள்; இப்படி எத்தனையோத் துப்பாக்கிப்பிரயோகங்களை கேரள சர்க்கார் செய்துகொண்டு வருகிறது. பிணக்குவியல்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன; உலக ஜோதி, உத்தமர், அஹிம்ஷாமூர்த்தி மகாத்மா காந்தி அடிகள் பிறந்த இந்த நாட்டிலா இந்த கோர கொலைகள்? ஸ்ரீ நம்பூதிரிபாட் சிந்திப்பாரா? சீர்திருந்துவாரா? இனிமேலாவது தன்னுடைய அராஜரீக சர்வாதிகாரப் போக்கைவிட்டு ஜனநாயக வழியில் வருவாரா? சர்வாதிகாரக் கொள்கையைப்பின் பற்றிய ஹிட்லர் நிலையை ஸ்ரீ நம்பூதிரிபட் அறியவேண்டும்: சர்வாதிகாரம் என்றுமே நிரந்தரமாக நிலைத்தது கிடையாது; ஹிட்லர், முஸோலினி. போன்ற சர்வாதிகாரிகள் வழியை இன்னும் பின்பற்றவிரும்புகிறாரா ஸ்ரீ நம்பூதிரிபட்?

இந்தியாவில் கந்தகம் பற்றிய சர்வே!

நாட்டில் சில பகுதிகளில் கந்தக இருப்பைக் கண்டுபிடிப்பதற்காகச் சமீபத்தில் நடத்தப்பட்ட சர்வே ஒன்றில் ஊக்கமளிக்கத் தக்க முறையில் பலன்கள் கிட்டியிருப்பதை முன்னிட்டு, இந்திய பூகர்ப்ப சர்வே இலாகாவைச் சேர்ந்த அடிப்படை உலோகப் பிரிவு மைசூர் ராஜ்யத்திலும் பிஹார் ராஜ்யத்திலும் கந்தகக் கனிப் பொருளைக் கண்டுபிடிப்பதற்காக விவரமான ஆராய்ச்சியொன்றை மேற்கொள்ள முடிவு செய்திருக்கிறது.

தற்போது இந்தியாவில் மிகச் சொற்ப அளவே கந்தகம் உற்பத்தியாகிறது; ஆகையால் நாட்டின் தேவைகளில் பெரும் பகுதிக்கு இறக்குமதிகளையே நம்பியிருக்கவேண்டியிருக்கிறது நாட்டின் தொழில் வளர்ச்சி வேகம் அதிகரித்து வருவதால், கந்தகத்தின் இறக்குமதி 1951-ல் 1.21 கோடி ரூபாயாக இருந்தது. 1957-ல் 3.03 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது.

உள்நாட்டு கந்தக உற்பத்திக்கு இந்நாட்டில் நல்ல ஆதாரமெதுவும் இல்லை. ஆனால், அடிப்படை உலோகங்களின் கனிகள் பெரும்பாலும் ஸல்பைடுகளாக இருக்கின்றன; இந்நாட்டில் கிடைக்கும் கந்தகத்தில் பெரும் பகுதி, உலோக இயல் பக்குவ முறைகளில் கிடைக்கும் ஒரு உப பொருளாகவே சேகரிக்கப்படுகிறது. இந்நாட்டில் அடிப்படை உலோகங்களில் ஆராய்ச்சி, உற்பத்தி ஆகியவை விஷயத்தில் வர வர அதிக கவனம் செலுத்தப்படுகிறபடியால், அதற்குத் தகுந்தவாறு கந்தக உற்பத்தியும் அதிகரிக்கக்கூடும்.

சென்னை மத்திய கூட்டுறவு வீட்டு அடமான பாங்க் டைரக்டர்கள் போர்டு

சென்னை மத்திய கூட்டுறவு வீட்டு அடமான பேங்க் லிமிட்டெட்டுக்கான முதல் டைரக்டர்கள் போர்டை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. ஈரோடு கூட்டுறவு வீட்டு அடமான பேங்க் லிமிடெட்டின் தலைவர் ஸ்ரீ ஆர். கே. வெங்கடசுவாமி இதன் தலைவராவர். மற்றுமுள்ள 8 உறுப்பினர்களின் விவரம்வருமாறு: 1. சென்னை ஸ்ரீ. வி. வெங்கடாசலம் (உப தலைவர்), 2. சிதம்பரம் ஸ்ரீ வாகீசம்பிள்ளை எம். எல். ஏ. (பொக்கிஷதார்) 3. சென்னை கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்தரார் 4. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி 5. சென்னை அரசாங்க நிதி இலாகா காரியதரிசி 6. கோவை ஸ்ரீ எம். எஸ். பழனியப்ப முதலியார் 7. சென்னை ஸ்ரீஎம். இராஜா (தலைவர், சென்னை நகர கூட்டுறவு

Telegrams : MARIGOLD Phone : 31738

K. PERUMAL UDAYAR

Importer, Experter &
Manufacturers' Representative

Iron and Steel Approved Fabricator
and Approved Scrap dealer

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

வீடு அடமான பாங்கு) 8. ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாச அய்யர் எம். எல். ஏ. பட்டுக்கோட்டை; சென்னை மாநிலத்தில் உள்ள ஆரம்ப வீட்டு அடமான பேங்குகளுக்கு நிதி உதவி செய்வதற்காக மத்திய கூட்டுறவு வீடு அடமான பாங்க் அரசாங்கத்தினரால் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மத்திய கூட்டுறவு வீட்டு அடமான பாங்கில் பைலாக்களின்படி இணைக்கப்பட்ட அடமான பாங்குகளைச் சேர்ந்த 5 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், பங்குதாரர்களின் பிரதிநிதியாக பொதுக் குழுக் கூட்டத்தின்போது தேர்ந்தொடுக்கப்படும் ஒருவரும், சென்னை அரசாங்கம் நியமிக்கும் மூவரும் டைரக்டர்கள் போர்டில் இடம் பெறுவார்கள்.

ஸயாம் சங்கத்துக்கு இந்தியப் புத்தகங்கள் அன்பளிப்பு

தாய்லாந்திலுள்ள இந்திய ஸ்தானிகர், ஸ்ரீ ஆனந்த் மோஹன் சஹாய் தாய்லாந்தில் ஸயாம் சங்கத்துக்கு இந்தியா பற்றிய 48 புஸ்தகங்களை இம்மாத ஆரம்பத்தில் அன்பளிப்பாகக் கொடுத்தார். அப்புஸ்தகங்களில் மகாத்மா காந்தியின் வாழ்க்கைச் சரிதம் பற்றி டாக்டர் டெண்டுல்கரால் எழுதப்பட்ட எட்டுத் தொகுதிகளும் அடங்கியுள்ளன.

மாட்சிமை தங்கிய இளவரசர் தானி அந்த சங்கத்தின் சார்பாக அந்த அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டார்; இந்தியாவிலிருந்து தாய்லாந்துக்குக் கிடைத்துள்ள மகத்தான கலாசாரப் பரம்பரை பற்றி அவர் பாராட்டிப் பேசினார்.

சிங்கப்பூர் பூரண சுதந்திரம் அடையுமா?

சிங்கப்பூர் சுயாட்சிப் பெற்று விட்டது என்றச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், தமிழர்கள் மத்தியில் புகுந்த இந்த மகிழ்ச்சி எல்லைக்குள் அடங்காமல் விரிந்து செல்கிறது. பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில், கடந்த நூற்று நாற்பது ஆண்டுகளாக சிங்கப்பூர் அடங்கிக் கிடந்தது. தற்போது சிங்கப்பூர் சுயாட்சியில் ஒரே ஒரு குறை இருக்கிறது: அதுதான், சிங்கப்பூரின் மேல் "அயல் நாட்டு உறவு", "பாதுகாப்பு" என்ற இரண்டு அதிகாரங்களையும் பிரிட்டிஷார் தங்கள் கையில் வைத்திருப்பது; சீக்கிரத்தில் சிங்கப்பூரின் கையில் பூட்டப்பட்ட இந்தவிலங்கும் உடைத்து எறியப்படும் என்பது உண்மை.

சுயாட்சி பெற்றுள்ள சிங்கப்பூர் மலேயா சமஷ்டியில் சேர்ந்து கொள்ளும் என்றும் உறுதியாக நம்பப்படுகிறது.

ஆனால் இதில் சிந்திக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. மழை நின்றும் தூவானம் விடவில்லை என்று கூறுவதுபோல, சிங்கப்பூர் சுயாட்சிபெற்றும், பிரிட்டிஷாரின் ஆதிக்கப்பிடி இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. பிரிட்டிஷ் இராணுவம் சிங்கப்பூரிலிருந்து வெளியேறும் நாளோ, பாதுகாப்பு, அயல் நாட்டு உறவு ஆகிய முக்கிய பொறுப்புகள் சிங்கப்பூரிடம் ஒப்படைக்கும் தேதியோ, இது வரை குறிப்பிடப்படவில்லை.

சுயாட்சி சிங்கப்பூருக்குபிரிட்டிஷார் வழங்கிய போதிலும், முக்கிய பொறுப்புக்களை இன்னும் பிரிட்டிஷார் கைகளில் தான் வைத்துள்ளார்கள்.

சிங்கப்பூர் இன்று பெற்றுள்ள சுயாட்சிக்கு, எத்தனை, எத்தனையோ இளங்காளைகள் பலியானார்கள்; நாடு கடத்தப் பட்டவர்கள் பலர் உண்டு; இன்னும் பலர் தலைமறைவாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள்; அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் பலியான குடும்பங்கள் எத்தனையோ உண்டு. குற்றுயிராகப் பலர் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள்; சுதந்திரத் தாகத்தைத் தட்டி எழுப்பி, உயிர் ஊட்டிய உத்தமர்கள் அத்தனை பேருக்கும் நம்முடைய வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் சிந்திய இரத்தம் வீணாகி விடாது. சிங்கப்பூர் கையில் மாட்டப்பட்டிருக்கும் கடைசி விலங்கும் நொறுக்கப்பட்டு, பூரண சுதந்தரமடையும் நாள் வெகு தூரம் இல்லை என்பதை நாம் கூறிக் கொள்கிறோம்.

டில்லியில் விநாயகர் கோயில் கட்டிட நிதிக்கு உதவி செய்க

புதுடில்லியிலுள்ள விநாயக நகரில், தென்னிந்தியர்களுக்கு, என்று ஒரு விநாயகர் கோயில் எழுப்பப்பட இருக்கிறது; இந்த நல்ல முயற்சிக்கு சர்க்கார் ஆவனச் செய்துள்ளது. கோயில் கட்டுவதற்கு ஒரு நல்ல இடத்தை சர்க்கார் கொடுக்க முன் வந்ததற்கு சர்க்காரைப் பாராட்ட வேண்டும்; இந்தக்கோயிலுக்கு அஸ்திவாரம், நமது சென்னை ராஜ்ய முதல் மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் தான் போட்டார்கள் என்பதை நாம் நினைக்கும்போது, நாம் மகிழ்கிறோம்; வாழ்த்துகிறோம். நம்முடைய விநாயகர் கோயில் புது டில்லியில் கட்டுவதற்கு, நாம் ஒவ்வொருவரும் இயன்ற அளவு பண உதவி செய்ய முன்வரவேண்டும்; இது நமக்குப் பெருமை தரும் விஷயமாகும்; இட்டத்தட்ட இந்தக் கோயில் கட்டி முடிவதற்கு 3 லட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரியவருகிறது; நாம் தயங்காமல், தாராளமாக பணம் உதவி செய்ய முன்வரவேண்டும். ஆகவே, நம்முடைய உதவியை இதற்காக நியமிக்கப்பட்ட ''ஸ்ரீ. விநாயகர் மண்டிர் கமிட்டி'' எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பணம் அனுப்புபவர்கள், மணி ஆர்டர் மூலமாகவோ, அல்லது கிராஸ் செக் மூலமாகவோ, கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டுகிறோம்.

ஸ்ரீ விநாயக மண்டிர் கமிட்டி,

102, மெயின் விநாயக நகர்,

புது டில்லி.

அல்லது, கமிட்டியால் நியமிக்கப்பட்ட, அதிகாரப்பூர்வமான நபர்களிடம் பணத்தை நேர்முகமாகக் கொடுத்து, ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நல்ல காரியத்தைத் தொழில் பத்திரிகை ஊக்குவிக்கமுன் வருகிறது. விநாயகர் கோயில் கட்டுவதற்கு, நன்கொடையாக, பணம் அனுப்புபவர்கள் பெயர்களைத் தொழில் பத்திரிகைக்கு தெரிவித்தால், அவர்கள் பெயர்களை தொழில் பத்திரிகை, வரிசைகிரமமாக முறைபடி, வெளியிடும்; தமிழர் அன்பர்களே இந்த நல்ல காரியத்திற்கு பணம் உதவி செய்ய முன் வருக!

ஆசிரியர்,

தொழில்.

கற்களால் கட்டப்படும் கோயில்களைவிட மனித தேகங்களே உண்மையான கோயில்களாகும்.—காந்திஜீ.

டில்லி தமிழ்சங்கத்தின் வரவேற்பு!

'தொழில்' ஆசிரியர் ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் பேருரை.

டெல்லி தமிழ் சங்கத்தில் 13-6-59 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு தொழில் ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்களுக்கு ஒருவரவேற்புரை அளிக்கப்பட்டது.

ஸ்ரீ ஏ. வி. சுப்புசாமி எம். ஏ. அவர்கள் வரவேற் புரையில் "தொழில்" பத்திரிகை நம்நாட்டிற்கு தொழிலடிப்படையில் சிறந்த பணியாற்றுவதையும் டெல்லி தமிழ் மக்கள் பரிபூரண ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

"தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் பேசுகையில் "தொழில்" பத்திரிகை எந்த அரசியல் தொடர்பற்று தொழிலுக்கே ஒரு உரித்தான பெயரில் வெளிவருகிறதையும், தொழில் முன்னேற்றமடைய எவ்வகையிலும் பயனளிப்பதைப்பற்றியும் எடுத்துக்கூறினார். அதோடு மட்டுமல்லாமல் டெல்லி தமிழ் மக்கள் தங்கள் சங்கத்திற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி பெயரை வைத்ததைப் பற்றியும், டெல்லி தமிழ் மக்கள் இந்திய அரசாங்கத்திற்கு சிறந்த முறையில் பணியாற்றுவதையும், தமிழ்மக்கள் அந்நிய நாட்டிற்கு ஆலோசனை கூறுமளவில் விரிவாக முன்னேற்றமடைந்ததைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பிறகு மாலை 5 மணிக்கு ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசன், காரியதரிசி அவர்கள் வந்தனோபசாரத்தில், நம் நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்றும், தொழில் எவ்வித பாகுபாடில்லாமல் வளர்ச்சியடைய வேண்டும் என்றும் கூறினார்.

நீடித்தகாலம் வாழ்வது முக்கியமன்று, எவ்வாறு வாழ்வது என்பதே முக்கியம். —பெய்லி.

மணம், குணம் ஒருங்கே அமைந்த

மரகதம்

காபியை

உபயோகியுங்கள்

மொத்தமாயும், சில்லரையாயும் கிடைக்கும்
அன்றாடம் வறுத்து அரைத்து கொடுக்கப்படும்

K. ராமசாமி உடையார்,

பூரண உரிமையாளர்,

மரகதம் காபி ஒர்க்ஸ்

கரூர்.

மரியாதை என்ன?

[வி. சி. வாசுதேவன்]

"காலத்தினால் செய்த நன்றி சிறிதாயினும் அது ஞாலத்தினும் மாணப் பெரிது" என்றும், "ஒருவனுக்குத் தினைத்துணை நன்மை செய்யினும் பனைத்துணையாய்க் கொள்ளுதலே பண்புடைமை" என்றும் இன்னும் பல கருத்துக்களை ஔவையாரும், பொய்யாமொழிப் புலவரும் ஏனைய பன்மொழிப் புலவர்களும் நன்றி அறிதலெனும் இவ்வைர மொழியை பொன்னேடுகளில் பொறித்துப் போந்தனர்! ஆனால் நம் வையகம் ஏனோ செய் நன்றியை மறக்கத் துணிந்தது? (துணிகிறது) உபகாரஞ்செய்தவருக்கு அபகார மளித்தது? (அளிக்கிறது?)

உடலெங்கும் அன்பு வெளிப்பட்டு, ஒளி வீசிக் கொண்டிருந்த பசுவினும் பரமசாதுவான இயேசு நாதருக்கு இவ்வுலகம் செய்த உபகாரம் என்ன? உயிருடனே பச்சை இரத்தம் ஓடி வழிய சிலுவையில் அறைந்து கொன்று அகமகிழ்ந்துதான்! மூடரின் முரட்டுச் செயலைக் கண்டித்தும் பகுத்தறிவைப் பயன்படுத்துமாறும் மிகப்பல அரிய சேவைகளைச் செய்து நபிக்கு நம் ஞாலம் செய்த கைமாறு என்ன? கட்டாரி வெட்டும், குத்தும், கல்லடியும் தான்! உலக உத்தமர் —சாந்தத்தின் இருப்பிடம்— கருணைக்கடல் அண்ணல் காந்தியாருக்கு இவ்வுலகம் செய்த மரியாதை என்ன? மார்பிலே குருதியாறு புரண்டோடச் செய்த துப்பாக்கி ரவைதான்!

அடிமைத்தளையை அறுத்தெரிந்த ஏழைகளின் ஏந்தல் லிங்கனுக்கு இந்தத் தரணி தந்து மகிழ்ந்த பரிசு என்ன? நாடகக் கொட்டகையின் பக்கத்திலிருந்த மனைவி, மக்கள் பதறித்துடிக்க, கதறி அழத் துப்பாக்கியால் மென்று தின்னப்பட்டது அவருடைய பொன்மேனிதான்!

அமரகவி பாரதியாரின் கவிதைகளைச் சுவைத்துச் சுவைத்து ருசிகண்டு அவரின் கவிதை உள்ளத்தைப் புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறோமே அவருக்குப் பரிசளித்தது என்ன? வறுமை அவரை ஓட ஓடத் துரத்திச் செல்கையில் பாராமுகமாய் சென்றமைதான்!— சிந்திப்பது பாபமல்ல அது இயற்கை என்பதைக் கூறியதற்காக நம் மண்டலம் ஈந்து மகிழ்ந்த காணிக்கை என்ன? நச்சுக் கோப்பையைக் கொடுத்துக் கொக்கரித்து விலாவொடியச் சிரித்து மகிழ்ந்தது தான்!



புதுடில்லியில் விநாயகர் ஆலயம்

புதுடில்லி விநாயக நகரில் விநாயகர் ஆலயம் அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட விநாயகர் மண்டிர் கமிட்டி ஆரம்பவிழாவில் சென்னை முதல் மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் அவர்களால் ஒரு அரசமரம் நட்டுவிக்கப்பட்டது. அது சமயம் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். டாக்டர் பி. சுப்பராயன் எம். பி. ஸ்ரீ நாகப்ப செட்டியார் எம். பி. ஸ்ரீ கே. கருக்னன் மற்றும் பல பிரமுகர்கள் சிறப்பித்தபோது எடுத்தப்படம்.

அணுசக்தியைக்கண்டரேர்சன பர்க் தம்பதிக்கு உலகம் செய்த உபகாரம் என்ன? ஊரறிய, உலகறிய தூக்கு மேடைக்கு அனுப்பி உவகை கொண்டது! ஐயகோ? பாலூட்டி வளர்த்தாரைக் கொன்ற பாம்பென மாறிவிட்டதே நம் தரணி.

நன்றி கொன்று வாழலாகாது—நன்றி மறக்கக் கூடாது என்று எப்படித்தான் வற்புறுத்திக் கூறினாலும் செவிசாயாமல் சென்றுவிடுகிறார்கள் மனிதர்கள். ஆயின் சில பகுத்தறிவற்ற பிராணிகள் சங்கமங்கள் யாரும் கூறாமலே—எவரும் வலியுறுத்தாமலே நன்றி மறவாமையைப் பிறவிக்குணமாகப் பெற்றுள்ளன.

மேல் நாட்டில், எஜமானரைப் பல நாள் காணாமையால்

உபநயனம்

டில்லியில் ஸ்ரீ ஏ. வி. டிப்புசாமி அய்யர் எம். ஏ. அவர்கள் குமாரர் சிரஞ்சீவி ஏ. கே. ஸ்ரீனிவாசன் உபநயண முகூர்த்தம் புதுடில்லி விநாயகர் நகரில் 1—6—59ம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பல பெரியவர்கள் விஜயம் செய்து சிரஞ்சீவி ஏ. கே. ஸ்ரீனிவாசனை, ஆசீர்வதித்தபோது எடுத்த படம்.

ஊண், உரக்கமின்றி மடிந்த நாயையும்—இறந்த எசமானரின் சவம்—மறைந்தும் அருகாமையிலே நீரும் பருகாமல் இருந்து மாண்டு மகிழ்வுற்ற நாயையும்—ஒரு பாழடைந்த மண்டபம் நன்றாக இருக்கையில் செய்த உதவியை மறவாமல் வெயிலிலும், குளிரிலும் அபபாழ்மண்டபத்திலேயே தங்கி உடல் நோய்பட்டு மாண்ட பசுவையும் பற்றிக் கேள்விப்படுகிறோம்.

குளத்தில் வாழும் குமுதமலரும், அக்குளம் வற்றும்போது தானும் ஒட்டி, உலர்ந்து காய்ந்து போவதை நாம் பார்க்கிறோம். இவ்விதமாகச் செய்நன்றியை மறவாது. இருக்கையில் நம் அகிலத்தைப் பார்த்தால்.........? வேங்கை மரம் வேர் தளர்வுற்று, அடிமுறிந்து ஆற்றில் விழுந்தபோது அதன் மேல் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வாடி, வதங்கி மரத்துடன் மனம் வெதும்பி மடிகையில், அவ்வேங்கையிலுள்ள மலரின் தெவிட்டினிய தேனுண்டு வாழ்ந்த வண்டுகள் மரத்தோடு கொடியும், மலரும் மாளக்கண்டு விரைந்தெழுந்து அருகே நின்ற வேறொரு

இந்திரா விளக்கேற்றும் காட்சி

சென்னையில் காங்கிரஸ் அரசியல் மகாநாடு நடந்தபோது ஸ்ரீமதி இந்திரா காந்தி தமிழ்நாட்டின் பன்பாடு விளக்கேற்றும் போது முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் அவர்களும் த. நா. கா. கமிட்டி தலைவர் ஸ்ரீ ராஜாராம் நாயுடுவும் பங்கு கொண்டார்கள்.

மரத்தில் சென்று சேர்ந்ததைக் கண்டால், தேனுண்டு மயங்கும் வண்டுகளின் இழிகுணம் நமக்கு எப்படி வெறுப்பூட்டுமோ அப்படிப்பட்ட அருவருப்புதான் இவ்வுலகத்தின் மீது உண்டாகிறது! ''எந்நன்றி கொன்றார்க்கும் உய் உண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு'' என்ற குறளைப் பார்க்கையில் இத்தரணி தன்னிடத்தில் அதிகமாக நன்றிகொன்ற மக்களைப் பெற்றிருத்தலைக் கண்டு இதயம் துடியாய்த்துடிக்கிறது!

உப்பிட்டு வளர்த்தோரை—கண்ணுக்கு ஒப்பிட்டுப் பார்த்தோரை உள்ளளவும் நினைப்பேன்! உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினையேன்! அன்னம் உண்ட வீட்டில் கன்னமிடேன்! எவ்வளவு தீயனாயினும்—கற்பாறையை நெஞ்சமாகக்கொண்டிருந்தாலும்—உதவியவனை உதறித்தள்ளேன் என்றுஉறுதிமொழி பகர்ந்த கும்பகர்ணன், கர்ணன் போன்றோரைப் புராணங்களிலும் வேறு எத்தனையோ நூல்களிலும் பெற்றுள்ள வையகமே! இவரைப் பற்றியெல்லால் ஏட்டில் படித்து கற்றுத் தெரிந்த உலகே! அதன்வழி ஒழுக ஏனோ மறந்தனை? ஏனோ மறந்தனை?

வெட்க முற்ற வேழம்!

"பி. வி. கிரி"

போர்ப் பறை முழங்கியது. போர்! 'போர்! என வீரர் முழங்கிடும் ஓசை.

வீரப் பெருங் கூட்டம் முன்னேறிச் சென்று எதிரிகளை உருத்தெரியாமல் ஆக்கும் ஆவேசம். உறுப்பிழந்து ஓலமிடும் வீரக்குழு. போறிட்டு புறமுதுகிட்டோடும் கூலிப் படைகள் பல! "விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கி வைக்குந் தன் நாளை எடுத்து" என்றெண்ணும் எத்துணை வீரர்கள் சமர்புரிகின்றனர்!

போரிலே வெற்றி பெற்ற வீரத்தமிழர்கள் தம் வீராங்கனையை—இல்லத் தரசியைக் காண களிப்புடன் சென்றனர். மாற்றாரின் படைநிலை கண்டு எள்ளி நகையாடிய. கிள்ளியும் தம் மனை நோக்கி நடந்தான்.

ஆனால், கிள்ளியின் யானை மட்டும் நின்று விட்டது! நின்றதற்குக் காரணம் உண்டு. அதனுடை ஒரு தந்தம் உடைந்து விட்டது; கால் நகம் தேய்ந்து விட்டது. அதனல் நின்று விட்டது.

ஆம். கோட்டையின் மதிலைத் தகர்க்கும்போது ஒரு தந்தம் சேதமடைந்தது. மதிலைத் தகர்த்து உள்ளே புகுந்து மாற்றானை தன் உறுதி வாய்ந்த கால்களால் மிதித்து கொல்லும்போது கால் நகமானது தேய்ந்தது.

கிள்ளியின் வீரக்குழு துள்ளி சென்று கொண்டிருந்தது. இல்லாளைக்காண்போம், போர்க்களத்திலே புரிந்த வீரக்காட்சிகளைக் கூறுவோம் என வீடு நடையுடன் தன் மனை ஏகினர். ஆனல் வெட்கங்கொண்ட யானை? 'உடைந்த கொம்பையும், தேய்ந்த நகத்தையும் காதலி கண்டால் நகைப்பாளே!' என்றெண்ணியதால் தான் யானை நின்றுவிட்டது!

இதனை அழகுபட எடுத்தியம்பும் முத்தொள்ளாயிரச் செய்யுள்:

"கொடிமதில் பாய்ந்திற்ற
கோடும் அரசர்
முடி இடறித் தேய்ந்த
நகமும்—பிடி முன்பு
பொல்லாமை நாணிப் புறங்
கடை நின்றதே
கல்லார் தோள் கிள்ளி
களிறு!"

சுமதியின் சபதம்

சி.ஜெ.மார்த்தாண்டம் பி.ஏ.

கதையின் முன்பகுதி.

மைலாப்பூரில் பிரபல வக்கீலான குமாரி சுமதி, கண்ணப்ப முதலியாரின் ஒரே மகள்; சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்டவள்; அவளுடைய இதயதீபம்தான் ராஜரத்தினம்; ராஜரத்தினத்தைப் பிரிந்து அவளால் வாழமுடியாது; 8 ஆண்டுகளுக்குப்பிறகு, ராஜரத்தினம், மைலாப்பூரிலுள்ள சுமதியின் பங்களாவிற்கு வந்து சேர்ந்தான்; சிறுவர்களாக இருந்தபோதே, சுமதியும், ராஜரத்தினமும் ஒன்றாகப்பழகினார்கள்; ஒன்றாகவேப்படித்தார்கள்; ராஜரத்தினத்தின் குடும்பத்திற்கும் சுமதியின் குடும்பத்திற்கும் இடையில் ஏற்பட்டிருந்த நட்பு காலப் போக்கில், இவர்கள் இரண்டு பேருக்குமிடையில் காதலாக உருவெடுத்து வளர்ந்து வந்தது. 5 நாட்கள்தான் ராஜரத்தினம் சுமதி பங்களாவில் தங்கினான்; சுமதியின் தகப்பனார் கண்ணப்ப முதலியார், ராஜரத்தினத்தைக்கடிந்துப் பேசியதால் மனம் தாளாது, அவன் சுமதியிடம்கூட சொல்லிக்கொள்ளாமல் பங்களாவை விட்டு வெளியேறி விட்டான்.

3. பூர்வீக வரலாறு

ராஜரத்தினம் பிரிந்ததும், சுமதிக்கு அவள் இதயகோயிலில் ஏற்றிவைத்த தீபம் அணைந்துவிட்டதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டுவிட்டது; அவளுடைய எண்ண அலைகளெல்லாம் ராஜரத்தினத்தின் மேல் செல்ல ஆரம்பித்துவிட்டன; மனம் ஒரு இடத்தில் இருப்புக்கொள்ளாததால், மாடிக்குச் சென்று நேற்றையதினம், ராஜரத்தினம் உட்கார்ந்திருந்த அறையை மேலும் கீழும் பார்த்தவண்ணமாக, அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தாள்:

ஒருடம்ளர் நிறையப்பால் இருப்பதை அவள் பார்த்துவிட்டாள்; ஆம் நேற்றைய

இரவில், ராஜாத்தினத்துக்கு அவள் பால் கொண்டுவந்து கொடுத்திருந்தாள்.

பாலைக்குடிக்காமல் அப்படியே ராஜாத்தினம் வைத்துவிட்டுப்போனதை, நினைத்தாள்; அவளுடைய, சதுப்பேறியகன்னங்களில் கலங்கிய அவளுடைய கண்கள், கண்ணீரை விட்டுக்கழுவிக்கொண்டிருந்தன.

எட்டாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்களை ஒன்றன் பின் ஒன்றாக நினைத்து பெருமூச்சி விட்டுக் கொண்டிருந்தாள். இன்று அவள் ஒரு பிரபல வக்கீல்; அன்று:

நெல்லை ஜில்லாவின் இழக்குக் கோடியில், சமுத்திரத்திற்கு சுமார் 2 மைல்களுக்கு மேற்கே, ஆறுமுகநேரி என்ற ஒரு இராமம் இருக்கிறது. அரசியல் கோட்டை என்று கேட்டால் அந்த வட்டாரத்து மக்கள் தயங்காமல் ஆறுமுகநேரி என்று கூறுவார். இயற்கை அன்னை தன் எழிலைக்கொட்டி, அவ்வூரை அழகு பூங்காவாக வைத்திருந்தாள்; ஊருக்கு வடக்கே உப்புப் பாத்திகள் நிறைய உண்டு; வாரத்திற்கு இருமுறை கூடும் சந்தை ஒன்று ஊரின் நடுவில் அமைந்துள்ளது.

ஊரின் மேற்குக்கோடியில் தான் நாயக்கர் குடும்பம் இருந்தது; ராஜாதெருவின் நடுவில், இரண்டு பெரிய வீடுகள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருந்தது; எப்போதும் வீட்டின் முன் பச்சைநிறமான ஒரு "பியுக்" கார் நின்றுகொண்டிருக்கும்.

கோவிந்தசுவாமி நாயக்கரும்; கஜபதி நாயக்கரும், சகோதரர்களாக வார்கள். ஒரு வீட்டில் கோவிந்தசுவாமி நாயக்கரும், அடுத்த வீட்டில் கஜபதி நாயக்கரும் வசித்துவந்தார்கள் கோபால்சுவாமி நாயக்கருக்கு ராஜாத்தினம், சத்தியவேல் என்று இரண்டு புத்திரர்களிருந்தார்கள்; சுமதிபங்களாவை விட்டு வெளியேறிய ராஜாத்தினம் கோபால்சாமி நாயக்கரின் மூத்தமகன். கஜபதி நாயக்கருக்குக் கமலா என்று ஒரு மகள் உண்டு.

தெருவின் தெற்குக் கோடியில் தான் கண்ணப்ப முதலியார் வசித்து வந்தார்; முதலியார் குடும்பத்திற்கும் நாயக்கர் குடும்பத்திற்கும், உறவு இல்லாவிடினும் அந்நியோன்யமான பழக்க வழக்கங்கள் உண்டு;

நாயக்கர் வீட்டினுள் காலெடுத்துவைத்தால், அரண்மனையோ என்று ஐயப்படும் அளவுக்கு, சித்திர வேலைப்பாடுகள் மைந்த சுவர்களில் வர்ணங்கள் தீட்டப்பட்ட பற்பல படங்களும் 6 அடி உயரமுள்ள நாயக்கருடைய தங்க நூலால் பின்னப்பட்ட படமும், தொங்கிக்கொண்டிருக்கும்.

முற்றத்தின் நடுவில் நாயக்கர் உட்கார, அழகிய சோபா ஒன்று போடப்பட்டிருக்கும்: அவரைச் சுற்றி, நாற்காலிகள் பல ஆங்காங்கே ஒழுங்காக

போடப்பட்டிருக்கும்; நான்கு தூண்களிலும், கண்ணாடிகள் பொரிக்கப்பட்டிருக்கும்.

குற்றேவல்களைச் செய்ய வேலையாட்கள் ஆங்காங்கே நின்றுகொண்டிருப்பார்கள்.

கண்ணப்ப முதலியாரும், கோவிந்தசுவாமி நாயக்கரும் உயிருக்குயிர் நண்பர்கள்; எப்போதும், கண்ணப்ப முதலியார் கோவிந்தசுவாமி நாயக்கரோடு தானிருப்பார்; சில நேரங்களில் முதலியார், நாயக்கர் வீட்டில் உணவு உட்கொள்வார்: இரவு நேரங்களில்கூட நேரம் போவது தெரியாமல் இரண்டு பேர்களும் உரையாடல் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்;

கண்ணப்ப முதலியார் மகள் சுமதி, அப்போது ஆறுமுகநேரி ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். ஸி. படித்துக்கொண்டிருந்தாள். கோவிந்தசுவாமி நாயக்கர் மகன் ராஜரத்தினமும், அதே பள்ளியில் தான் படித்துவந்தான்.

அப்போது ராஜரத்தினம், செல்வச்சீமானின் மகன்; சுமதியும் ராஜரத்தினமும், பாலிய வயதிலிருந்து, நன்றாகப் பழகி வந்தார்கள்; எங்கு சென்றாலும் கோவிந்தசுவாமி நாயக்கர், ராஜரத்தினத்தையும், சுமதியையும், காரில் அழைத்துச் செல்வார்; இரண்டு பேரும் சிறுவர்களாக இருக்கும்போது, கோவிந்தசாமி நாயக்கர், அவர்களைத் தன் பிள்ளையென்றே கூறுவார்; இரண்டு பேரும் ஒன்றாகப் பழகினார்கள்;

ஒன்றாகவேப் பள்ளிக்கு சென்றார்கள்.

ராஜரத்தினத்திற்கு, சுமதியைப் பார்க்காமல் ஒரு நிமிடமும் இருக்கமுடியாது. சுமதி, தன்னுடைய வீட்டிற்கு வர சிறிது காலதாமதம் ஏற்பட்டால் காரை எடுத்துக்கொண்டு நேரே சுமதிவீட்டிற்குச்சென்று விடுவான். இரண்டு பேரும் வெவ்வேறு ஜாதிகளைச் சேர்ந்தால்கூட, அவர்களிடம் குடிகொண்டிருந்த நட்பு பிரிக்க முடியாதது; இரண்டு உள்ளங்களும் ஒன்றாகிவிட்டன: கோவிந்தசுவாமி நாய்க்கருக்கும், கண்ணப்ப முதலியாருக்குமிடையில் ஏற்பட்ட அந்த குடும்ப நட்பு அவர்கள் பிள்ளைகளிடம் காதலாக மாறிவிட்டது.

சுமதி பத்தரை மாத்துத் தங்கத்தைத் தரையில் வார்த்துவிட்ட மாதிரி, கண்டவரைக் கவரும் கட்டழகு மங்கையாக இருந்தாள்; இரண்டு உள்ளங்களும், மகிழ்ச்சி வெள்ளத்தில் ஊர்ந்து சென்று கொண்டிருந்தன.

4. சுமதியின் காதல்

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதுவதற்கு தன்னை அப்போது ஆயத்தப் படுத்துக் கொண்டிருந்தாள் சுமதி: சுமதியும் ராஜரத்தினமும் ஒன்றாக, கோவிந்தசாமி நாயக்கர் வீட்டின் மேல் மாடியில் படித்துக் கொண்டிருந்தார்கள்; சந்தேகங்கள் ஏற்படும்போது, ஒருவருக்கொருவர் கேள்விகள் கேட்டு, கருத்துக்களை பரிமாறிக்கொண்டிருந்தார்கள்; மின்சார விளக்கு ஒளியை பட்டப்பகல்போல் அறையில் பரப்பிக்கொண்டிருந்தது.

வேலையாள் ஒருவன் ''டெர்மாஸ் பிளாஸ்கில்'' இருவருக்கும், காபி கொண்டு வந்தான்.

''இந்தாங்க, படிச்சது போதும், காபியைக் குடித்து விட்டு மேலே படிக்கலாம்'' என்று கூறிக்கொண்டு, பிளாஸ்கிலுள்ள காபியை, ஒரு கண்ணாடி கிளாஸில் ஊற்றி, நாணிக்கோணி, முகமலர்ச்சியோடு, அவனிடம் நீட்டினாள்.

ராஜரத்தினம், காபியை வாங்கி குடித்துக்கொண்டு பேச்சை ஆரம்பித்தான்.

''சுமதி, வாழ்வில் இதே போல் நாம் என்றும் இருக்க வேண்டும் வாழ்க்கையில் ஏற்பட இருக்கும் மேடுபள்ளங்கள் நம் வருங்கால வாழ்க்கையை பாதிக்கவிடக்கூடாது. நான் உன்னைத்தவற வேறு ஒருவ்வரையும் திருமணம் செய்யமாட்டேன் இது உறுதி'' என்றான் பரிவான குரலில்''.

''நானும் அப்படிதான். வாழ்வில் எத்தனையோ புயல்கள் வீசலாம்; சூதும். கபடும் வெவ்வேறு ரூபகங்களில், சந்தேகப் பேயை நம்மீதுத்தூண்டி விடலாம்; ஜாதியும் நம் காதலுக்கு இடையில் தலைவிரிகோலமாக நாம் கட்டி இருக்கும்மனக்கோட்டையை சுக்கு நூருக்கவரலாம்; ஆயிரம் அலைகள் மோதினாலும்

பல் வியாதிகளை பறந்தோடச் செய்யும்

டாக்டர் கோட்டீஸ்

முயல் மார்க் பயோரியா பற்பொடி

ரிஜிஸ்டர்ட்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்



DR.KOTI'S PYORRHEA TOOTH POWDER

டாக்டர் கோட்டீஸ்

இண்டியன் கெமிக்கல் ஒர்க்ஸ், சென்னை-5

போலிகள் ஜாக்கிரதை!

நெம்பர்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.

கருங்கல்லைக் கரைத்து விட முடியாது; நம்மிரண்டு பேருக்கும் உறுதியான உள்ளம் வேண்டும்; வாழ்வில் நம்மிருவரில் ஒருவருக்கு ஏற்பட இருக்கும் ஏற்றதாழ்வை வைத்து, மற்றவரைக் கணிக்கக்கூடாது. "வாழ்க்கை முட்டாளால் சொல்லப்பட்டகதை, அதில் இன்பம் இல்லை! உற்சாகம் கடுகளவும் கிடையாது; இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஒன்றுமே கிடையாது" என்று மாக்பத்" "நாடகத்தில் நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் கூறுகிறார்; அவர் கூற்றை நாம் பொய்யாக்கவேண்டும்: வாழ்க்கை ஒரு இன்பமலர். வறண்ட பாலை வனத்தில்கூட இன்ப நீரோட்டமுண்டு; அதுபோல் வறண்ட வாழ்விலும் இன்பமான நீரோட்டம் உண்டு என்று ஷேக்ஸ்பியருக்கு நாம் எடுத்துக் காட்டவேண்டும்; நாம் வாழ்வை சீக்கிரம் துடங்க இருக்கிறோம்" என்றாள் முல்லை போன்ற



அவள் பற்களை வெளியே தெரிய "க்ளுக்" கென்று சிரித்துக்கொண்டு.

"வாழ்க்கை என்பது ஒரு பெரிய போராட்டம்; குழப்பமும் கொந்தளிப்பும் சர்வ சாதாரணமாக நிகழும்; புயல் வீசும் போது பெரிய உறுதியான மரங்கள் சாய்ந்து சாலையோரங்களில் கிடப்பதை நீ பார்த்திருக்கலாம்: ஆனால் புல் ஒடிந்து போவதில்லை? ஏன் புல் வலுவில்லாவிடிலும், புயலுக்குத் தகுந்தபடி தன்னை வளைந்து கொடுத்துக் கொள்ளும்; உறுதியான மரங்கள் அப்படி வளைந்து கொடுப்பதில்லை; மரங்கள் ஒடிந்து கீழே விழுந்து பட்டுப்போகின்றன: புல் ஒடிந்து போகாமல் கம்பீரமாக வாழ்கிறது. இதிலிருந்து நாம் தெரிய வேண்டியகருத்து சில பொதிந்துகிடைக்கிறது: வாழ்க்கையில், சூழ்நிலைமைக்கும் சந்தர்பத்திற்கும் தகுந்தபடி தன்னை வளைந்து கொடுக்கும் மனிதன், அவன் சாதாரண மனிதனாக இருந்தபோதிலும்கூட, வாழ்க்கையை இன்பம் நிறைந்த பூங்காவாக ஆக்கமுடிகிறது; அவனுக்கு வாழ்க்கை வெற்றியாக முடிகிறது; புயலின் வேகத்திற்குப் பலியாகாமல், புத்துயிர் பெற்று வாழ்கின்ற புல்லைப்போல சூழ் நிலைமைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தகுந்தபடி தன்னைமாற்றி அமைக்க முடியாத விரும்பாத மனிதன், அவன் எவ்வளவு திறமை படைத்தவனாக இருந்த போதிலும், புயலில் சிக்கிய உறுதியான மரம்போல், வாழ்க்கை புயலில் சிக்கி, நொறுக்கி, சின்னாபின்னமாக்கப்பட்டு, வாழ்க்கையில் தோல்வி அடைகிறான். இதுதான் நான் கண்ட அனுபவம் என்று ராஜரத்தினம் சொல்லி முடித்ததும், நீங்கள், அரிஸ்டாடில், பிளேட்டோவையெல்லாம், உங்கள் தத்துவ ஞானத்தால் தோற்கடித்துவிட்டீர்கள். உங்கள் எண்ணம் போல் நம் வாழ்வு மலரட்டும்; நான் இப்போதிலிருந்து, உங்கள் எண்ணம் போல், என்னை திருப்பிக் கொள்ள ஆசை படுகிறேன்" என்று சுமதி சொன்னதும், இரண்டு காதல் ஜோடிகளும், ஒன்றையொன்று தழுவி மகிழ்ச்சி வானத்தில் பறக்க ஆரம்பித்து விட்டன. திடீரென்று பாண்டியன் தலைவிரி கோலமாக ராஜரத்தினத்திடம் ஓடிவந்தான்; அவன் முகத்தில் பீதியும்கொந்தளிப்பும் பிரதிபலித்துக்கொண்டிருந்தன.

(தொடரும்)

ஒருவர் பொய்.........!

[ஜே. பானு]

'மஞ்சுளா' என்று அவன் அழைப்பதற்கும் 'அத்தான்' என்று பதில் வருவதற்கும் சரியாக இருந்தது. அன்று ரகு சென்னை சென்று திரும்பி இருந்தான். முகத்தில் புன்னகை தவழ, சென்ற காரியம் என்னவாயிற்று? என்று கேட்டாள். சென்னையில் நடந்ததை விதானமாக பிறகு சொல்லுகிறேன் என்று சொன்னான். அதற்குள் அவர்களின் செல்வன் 'அப்பா' என்று மழலைச் சொல்லால் அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான். அவனை எடுத்து முத்தமிடுவதற்குள் ரகுவின் நண்பன் மூர்த்தி அங்கு வந்தான்.

வரும்போதே 'அன்று சொன்ன விஷயம் என்னவாயிற்று' என்று கேட்டான். "ஓஹோ அதுவா நேற்று கூட நான் அவரை சந்தித்தேன், மனிதன் அசைய மாட்டேன் என்கிறார். எப்படியும் இன்னும் ஒரு வாரத்திற்குள் முடித்து விடுகிறேன் என்று சொன்னார். மேலும் உனக்கு பிரமோஷனையும் வாங்கி தருவதாகவும் சொல்லியிருக்கிறார்."

மாலை ஐந்து மணி இருக்கும் மஞ்சுளா காபி கொண்டு வந்து கொடுத்தாள், அதைக் குடித்துக் கொண்டே ரகு காலையில் மஞ்சு கேட்டதற்கு பதில் சொல்லத் தொடங்கினான்.

"நான் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை அடைவதற்கும் என் அத்தை மகள் மீனா காத்துக் கொண்டிருந்ததற்கும் சரியாக இருந்தது. அங்கிருந்து வீடு சேர ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தோம். அவளுக்கு என் மீது என்ன அன்பு; வீட்டில் எல்லோரும் சுகமா? உமக்கு பிரமோஷன் கிடைத்து விட்டதா? குழந்தை எப்படி இருக்கிறான் என்று பல கேள்விகள் கேட்டுக் கொண்டே போனாள். அவைகளுக்கு பதில் சொல்லி முடிவதற்குள் எனக்கு போதுமென்றாகி விட்டது.

வீடு நெருங்க நெருங்க பேச்சு தளர்ந்தது. தன்னை பெண் பார்க்க ஏதோ ஒரு பட்டிக்காடு வந்திருப்பதாகவும், ஆயிரம் பொன் கொட்டிக் கொடுத்தாலும் வேண்டாமென்றும் கூறினாள். மீனாவின் ஆசையெல்லாம் தான் காதலித்த ராஜுவையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

ராஜுவும் மீனாவும் மிடில் ஸ்கூல் தொடங்கி இன்டர்வரை ஒன்றாக படித்தவர்கள். ஒரு நாள் அவர்கள் சமூக சேவை செய்வதற்காக பக்கத்திலிருந்த

221, Pilliar Koil Street,
MADBAS-3

221, பிள்ளையார் கோயில் தெரு,
சென்னை-3

சேரிக்குச் சென்றிருந்தார்கள். செல்லும்போதே தன்னுடைய அன்பை கடைக்கண்ணால் தெரிவித்தாள். அவனும் பதிலுக்கு நகைத்தான். அன்று பாதையை சரியாக செப்பனிட வேண்டிய வேலை. சல்லிக் கற்கள் கொட்டப்பட்டிருந்தன. அவற்றை மாணவிகள் கூடைகளில் கொண்டு வந்துகொடுக்க மாணவர்கள் அதை வாங்கி பாதையில் கொட்டி சமப்படுத்துவார்கள். ராஜு இமை கொட்டாமல் மீனா எப்பெர்ழுது வருவாளோ என்று ஏங்கியிருப்பான். அவள் வரும்போதே அவள் நடையையும் ஒய்யாரத்தையும் ரசித்துக் கொண்டே அன்னநடை, என்று பலவாறாக புகழ்வான்.

கற்களை வாங்க எதிர் நோக்கி இருப்பான். இவனை ஏமாற்றுவதற்காகவே சற்று நேரம்கழித்து வருவாள். சமூக சேவை முகாமிற்குள் இவ்விருவரையும் மற்ற மாணவர்கள் ஒருவாறு பார்த்தனர், தன் உற்ற நண்பனான கோபு ஒருநாள் ராஜுவை கேட்டே விட்டான், என்னப்பா ராஜு பரவாயில்லையே சரியான ஜோடியைத் தேடிவிட்டாய்; உனக்கென்ன குறைவு என்று.

அன்று மாலை மீனா தனியே செல்லவேண்டியிருந்தது. துணையாக ராஜு சென்றான், அப்போது கேட்டான் 'என்மீது இவ்வளவு அன்பும் ஆசையும் வைத்திருக்கிறாயே, சதா இதே நினைப்புதானா? அல்லது பாடங்களை சரியாகபடிக்கிறாயா? இவ்வருஷம் பைனளில் கோட் தானா' என்று கேட்டான். 'போங்கள் ராஜு அப்படி எல்லாம் சொல்லாதீர்கள், நீங்கள் இருக்கும்போது எனக்கு பயமேது, நான் வகுப்பில் முதல் இடம் வாங்கியிருந்தும் இவ்வாறு கூறலாமா? என்று கோபிப்பது போல பேசினாள்.

ஒருநாள் வீட்டில் அம்மாவும் இல்லை. ராஜு தன்னுடைய லாஜிக் புத்தகம் வாங்க அங்கு போயிருந்தான். மீனாவைகாணவில்லை, வெளியில் சென்றிருந்தவள் அப்பொழுது தான் வந்தாள். வந்து அதிக நேரமாக நிற்கிறீர்களா? என்று கேட்டுவிட்டு நாற்காலியை காண்பித்தாள். அதில்அமர்ந்த அவனுடைய எண்ணங்கள் எங்கெங்கோ பறந்தன.

அடுப்பங்கரைக்குச் சென்ற அவள் சிறிது நேரத்திற்கெல்லாம் காபியோடு தரிசனை தந்தாள். அதை கையில் வாங்கிக் கொண்ட அவன் அவளை தன் அருகில் அழைத்து காபியை அவள் வாயின் அருகில் எடுத்துச் சென்ருன். ''போங்கள் ராஜு குறும்பு இப்பொழுது நீங்கள் குடியுங்கள் பிறகு நம் திருமணம் முடிந்ததும் பார்க்கலாம் என்ருள்.

இவ்வளவு நேசத்திற்கு நேசம், அன்புக்கு அன்பு உயிருக்கு உயிராய் நேசித்த ராஜுவை மலேரியா வாயில் போட்டுக்கொண்டது. இந்த ஏக்கத்திலேயே நினைத்து, நினைத்து உள்ளம் நொந்து அவ்வருஷம் பைனலில் தவறியே போய் விட்டாள்.

அப்பொழுதுதான் அந்தப் பட்டிக்காட்டு ஆசாமிக்கு அவளை மணமுடித்துக் கொடுக்கதாயார் எத்தனித்துக் கொண்டிருந்தார். இது பிடிக்காமல்தான் தன் தாய் மாமன் ரகுவை அழைத்திருந்தாள்.

வீட்டில் ஏதோ காரியாலய வேலை என்று சாக்கு சொல்லி விட்டு வந்திருந்தான். தன் அக்காவிடம் சமாதானப் படுத்தி மீனுவை ஒருவாரத்திற்கு தன் வீட்டிற்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டான். அவரும் ஒத்துக்கொள்ளவே அன்று இரவே தன் ஊராகிய செங்கல்பட்டை அடைந்தார்கள்.

மூர்த்தி அடிக்கடி ரகுவின் வீட்டிற்கு வருவது வழக்கம்.

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

ஒருநாள் ரகுவும் அவன் மனைவியும் வெளியே சென்றிருந்தார்கள். திடீரென்று அச்சமயம் மூர்த்தி வீட்டிற்குள் நுழைந்தான். மாடியிலிருந்து இறங்கி வந்துக்கொண்டிருந்த மீனு மூர்த்தியை கண்டதும் தயக்கத்துடன் மெதுவாக வந்தாள், என்ருலும் படித்தவள் ஆதலால் எதிரே வந்து, வந்த காரியத்தை விசாரித்தாள். ஒன்றுமில்லை ரகுவை பார்ப்பதற்காக வந்தேன், ஒரு முக்கியமான விஷயம், என்று சொல்லிக்கொண்டே நாற்காலியில் அமர்ந்தான்.

மெதுவாக பேச்சை ஆரம்பித்தான், நீங்கள் தனியாக இருக்கிறீர்களே உங்களுக்குத் துணை வேண்டாமா? என்று ஒரு கேள்வியை போட்டு வைத்தான். இதில் இரு பொருள்கள் இருப்பதை அவள் அறியாமலா இருப்பாள்?

ஏற்கனவேகிடைத்த துணைவனுடைய வரலாற்றை சோகம்

குறைந்த விலை ! சிறந்த வேலை !

ஏ. டி. எச்.

டி ர ஸ ஸ்

(அரசாங்க உதவிபெற்றது)

16, அருணாசல நாய்க்கன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

நாங்கள் B & C துணிகளினால் அளவெடுத்தும், ரெடிமேடாகவும் குறந்த விலையில் சிறந்த முறையில் குறித்த காலத்தில் ஆடைகளைத் தைத்துக் கொடுக்கிறோம்.

எங்களிடம் ஒருமுறை வருகைதந்து உண்மை உணருங்கள் !

உரிமையாளர்

A. ஆறுமுகம் G. C. T.

கலந்த குரலில் எடுத்துக்கூறினாள். இதைக்கேட்டுக்கொண்டிருந்த மூர்த்தி மிக மிகவருந்தினான். ஆறுதலாக சில வார்த்தைகளை கூறினான். இடையில் சற்றுநேரம் மௌனம் நிலவியது. மெதுவாக தலையை நிமிர்ந்து மீனாவை பார்த்தான். மீனாவும் அவனை பார்த்தாள். அந்தப்பார்வையில்தான் எவ்வளவு பொருளும், கருத்தும் இருந்தது. 'கண்ணோடு கண்ணோக்கின் வாய்ச்சொற்கள் என்னபயன்' வெட்கம் தாங்காமல் மீனா உள்ளே ஓடியேவிட்டாள்.

சாடையாக ரகுவிடம் விஷயத்தை மூர்த்தி தெருவித்தான். மூர்த்தியின் அழகும், படிப்பும் உயர்ந்த உத்தியோகமும், எல்லோரிடமும் அன்பாக பழகும் நற்குணமும் மீனாவை அவன்பால் காந்தம் போல் இழுத்தன. ரகுவிடம் சம்மதத்தை தெரிவித்தாள். நாட்டுப்புறபட்டிக்காட்டை விட்டு நகர்ப்புற மூர்த்தியை தன் இல்லத்துணைவனாக வரித்துக் கொண்டாள். பிறகு சொல்ல வேண்டுமோ அவர்களின் வாழ்க்கை ஓடம் வெகு சுவாரஸ்யமாய் ஓடியது என்று.

நடிகை நந்தினி

"மாமல்லன்"

பாத்திரங்கள்: சர், ராமஸ்வாமி, நடிகை நந்தினி, ஓட்டல் வேலையாள் ரத்னம், நடிகன சங்கர்.

இடம்: சிலோனிக் லாட்ஜ்.

நடிகையின் வலையில் சிக்கிய சர். ராமசாமி தேன் உண்ட வண்டு மாமலரை மொய்ப்பது போல் அவளை சுற்றித்திரிகிறார். நடிகன் சங்கரும், வேலையாள் ரத்னமும் வலை வீசுகின்றனர்...நடப்பதை மேலே படியுங்கள்.

கீழே விழுந்த நந்தினியை கைலாகு கொடுத்து, அவளை நிற்கவைத்து, அவளாடையில் படிந்திருந்த தூசியை தட்டியபடி கண்ணே...அடி ஏதாகிலும் பட்டதா...உன் மென்மையான மேனிக்கு ஏதாகிலும் துன்பம் ஏற்பட்டால் நான் சகியேன் என்றார், சர் ராமசாமி. எனக்கு யாதொரு துன்பமும் நேராது அத்தான், தாங்கள் என் அருகில் இருக்கும்வரை என்றாள் நந்தினி,

ஒருவர்க்கொருவர் அணைத்தபடி சிலோனிக் லாட்ஜ் ஹாலைக் கடந்த சமயம், ஓட்டல் தலைமை வேலையான ரத்னம், அவர்களை பிரமுகர்கள் தங்கும் ரூமிற்கு அழைத்தான். ராமசாமி அவனை உற்றுநோக்கி, நீ புது ஆள் போலிருக்கிறது, எனக்கு இங்கே தங்க தனி இடம் இருக்கிறது என்றார். ரத்னம் நந்தினியின் பேரழகைக் கண்டு சொக்கிப்போனான், அவளை ஓரக்கண்களால்விழுங்கி விடுபவன்போல் பார்ப்பதை, ராமசாமி கவனித்தார்...ரத்னம் அவர்களை விட்டுபோனபாடில்லை. தங்களுக்கு பிடித்தமானவைகளைச் சொல்லுங்கள் கொண்டுவருகிறேன்,...கொண்டுவருகிறதுங்களா...என்றான். ராமசாமிக்கு அவனது செய்கை பிடிக்கவில்லை...என்ன செய்வது, சரி எடுத்துவாபார்க்கலாம், என்றார். அவன் அங்கிருந்து போனால் போதுமென்றாகிவிட்டது, அவருக்கு. அவன், அவள் மீது வீசும் பார்வையைக்கண்டு அவன் சென்றவுடன், அவன் உன்னைமென்று விழுங்கி விடுவான் போலிருக்கிறதே, என்றார், என்ன சொல்கிறீர்கள் கண்ணாளா, நான் கவனிக்கவில்லையே என்றாள் (அவள் உள்ளம் இவ்வுலகிலிருந்தால் தானே அவள் சொர்க்கத்தில்...) ராமசாமி, அவளை அப்படியே இருகக்கட்டியணைத்து, அவளது செவ்விதழ்களில் முத்துமாரி பொழிந்தார். அங்கே தயாரர்க வைத்திருந்த கிரஷை கோப்பையில் ஊற்றி, அவளுக்கு ஊட்டிக்கொண்டே நீதான்

என் கண்ணுக்குட்டி...வா மடி மீது உட்கார், இனி நீ தான்...என் சீமாட்டி என் ஆவிபொருளெல்லாம் என்றார். அ ஹ் ஹ் நாம் இருவரும் சொர்க்கத்திற்கு ஆம்...சொர்க்கத் திலிருக்கிறோம். கண்ணாளா என்னைக் கட்டியணைத்து (இதற்கு முன் அவள் இம்மாதிரியான சுக போகத்தை அனுபவிக்க கனவிலும் நினைத்தவளல்ல. அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஆருகப்பெருகியது. அவரை அப்படியேமென்று விழுங்கி விடுபவள்போல் தன் கூரிய கண்களால் கண்ணோட்ட மிட்டாள், நந்தினி.)

பிரபல நடிகனான சங்கர், பிரசித்திபெற்ற நடனக்காரியோடு, தன்னை நோக்கி வருவதைக் கண்டுபிரமையுற்றாள், நந்தினி. ஏன் ராமசாமியும் வியப்புற்றார் என்றால், மிகையாகாது. அவ்விருவரும் அறையினுள் நுழையும் சந்தர்ப்பத்தில் ராமசாமி அவர்களை அழைத்துக் கொண்டு வெளிவராந்தாவுக்குச் சென்று விட்டார். ராமசாமி தன்னுடன் இருப்பதைக் கண்டால் இவர்கள் ஆச்சரியப்படுவார்கள் என எண்ணினாள் நந்தினி.

சங்கர் தயங்கியபடி ஏதோ சொல்ல வாயெடுத்தான், அதற்குள் ராமசாமி ஏன் தயக்கம் சொல்லப்பா என்றார். ம்...ம்...இல்லைங்களென்நடிப்பின் வசனங்களை தாமதம் செய்யாமல் கொடுத்தீர்களானால் என்றான்....ப்பூ அதுவா சாயங் காலமே தியேட்டருக்கு அனுப்பி விடுகிறேன், சரிதானே என்றார், ராமசாமி. (அச்சமயம் நந்தினி அங்குவந்து, மிடுக்கோடு ராமசாமியைப் பார்த்தாள். அவர், அவள் செய்கையை கவனியாதவர்போல் இருந்தார்.)

நந்தி: என்னுங்க என்னைவிட பிரமாதமாக நடிக்கக்கூடிய நடிகைகள் இருக்கும்போது தாங்கள் என்னை நாடியதின் காரணம்!

ராம: ஆமாம் அவர்கள் நன்றாய்த்தான் நடிக்கிறார்கள். நடித்தும் வருகிறார்கள், நாடகத்திலே உயர்ந்தவர்கள் தாம், அனுபவஸ்தர்களும் கூட, ஆனால் தாங்கள் "பிளாட்டோ" தியேட்டரில் நளினியின் பாகத்தை ஏற்று செவ்வனே நடித்தபடியால் என் இதயம் தங்களைக் கவர்ந்தது. தங்களின் நாணயத்தையும், நடையுடை பாவனைகளையும் நன்னடத்தையையும், கண்டு, தங்களை, நம் நாடகத்திற்கு தேர்ந்தெடுத்தேன், இன்னும் ஏதேனும்...

நந்தி: மிக்கநன்றி, என்றும் தங்களின்...

ராம: ம் ம்..., ரத்னம், நான்கு பாதம்கீர் கொண்டாப்பா (சிகரெட் டின்னை எடுத்து எல்லோரிடமும் நீட்டினார், தானும் ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டே, நந்தினியின், பேரழகை கழுகுக் கண்களால் நோட்டமிட்டார். அவர் விட்ட சிகரெட் புகை மாரிகால மேகம் போல் திரண்டு ஹாலை கம்மியது.) என்னம்மா நந்தினி...நீ ஒரு அபூர்வ நடிகை, ஆம் என்

சென்னை நகர கூட்டுறவு வீடு அடமான பாங்கியின் நிர்வார்களின் தேர்வு

சென்னை நகர கூட்டுறவு வீடு அடமான பாங்கியின் நிர்வாகிகளின் தேர்தல் அண்மையில் நடந்தது.

கீழ்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஸ்ரீ M. E. ராஜா, தலைவராகவும், ஸ்ரீ M. S. அப்துல் காதர், B. S C., M.C, உபதலைவராகவும், காஞ்சி கெங்காதரன் (மாமல்லன்), J. T. துரைராஜ், K. அண்ணாமலை முதலியார், K. விஸ்வலிங்கம், H. M. ஜகன்னாதம், T. ராமமூர்த்தி நாயுடு, V. P. சீனுவர்சன், ஆகியோர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலில் N. சிவராஜ் குழு தோல்வியுற்றது.



M. E. ராஜா

பிடியிலகப்படாமல், ஆனால் நண்பர்களிடம் அன்பாகவும் குதூகலமாகவும்...என்னிடம் இன்றுதான் இணைந்தாய் என் விரோதிகள். என்னை மண் தோண்டிபுதைக்க அன்றும் இன்றும் தயாராகத்தானிருக்கிறார்கள்.

நந்தி: (ஆழ்ந்த சிந்தனையிலிருந்து விடுபட்டவள்போல் முகபாவனை செய்து) தங்களின் செல்வாக்கின்முன் எல்லாம் அழிந்துபோம், கருகிவிடும். ம்ம் நான் தங்களுக்காகவே.

ராம்: பாஸ்கரனின் யூகமும் அதுவே.

நந்தி: (பாஸ்கரனின் பெயரைக்கேட்டதும் முகமுழுதும் ரத்தமேறி, சிவப்பாகமாறி, முகம் வாட்டமுற்றது) என்னங்கோ, அவர் என்னை வெறுக்கிறார், ரொம்பவும் குறும்புக்காரர், நாடகத்திற்கு வசனங்களை ஒத்திகை செய்யும்போதுதான், என்னை வெறுக்கிறார் எனத் தெரிந்தது.

சங்கர்: (குள்ளவடிவமும், பாரியான சரீரத்திற்கேற்ற உயரமில்லாதவராதலால், ரோல் சேரில் சிரமப்பட்டு உட்கார்ந்து சிகரெட்டைப் பிடித்துக்கொண்டே) ம்...ம் இன்னும்

P. H. முகமது

நஸீருத்தீன்

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்
G I பைப் & பைப்
பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

ஏதேனும் கம்ப்லேய்ண்டுகள்ம்...சொல்லுங்கள்...ஏன் பயப்படவேண்டும்.

ராம: அடசே விடப்பா ஒப்பந்தம் ஆகிவிட்டதே, இன்னும் என்ன.

சங்: நல்ல பொன்னம்மா, நீ அவர் அதிர்ஷ்டசாலி என்று தான் நான் சொல்வேன். உன் மாதிரியான சௌந்தர்யவதி தங்கவிக்ரகம், குயிலுக்கினிய சாரீரம், நாடகத்திற்கேற்ற முகவெட்டு, உனக்கு நிகர் நீயே தான். இன்றைக்கே உங்கள் நாடகமிருந்தால், என்னங்கசர், அய்யா உங்களுக்குள்ள. நாடகக் கம்பெனி மாதிரி எனக்கிருந்திருந்தால் இந்த எழிலழகியை நான கட்டாயம் அடைந்தேதீர்வேன் (என சொல்லிக்கொண்டே, நந்தினியைப் பார்து கண்ணடித்தான்).

நந்தினி: (அதனைக் கவனியாதவள்போல் கைகெடியாரத்தைப்பார்த்தபடி, சோபாவை விட்டெழுந்திருந்து) நேரமாகிறது நான வருகிறேன், வணக்கம்.

ராம்: போகிறீர்களா நானும் போகவேண்டியவன் தான். வெளிவராண்டாவிலிருங்கள் வந்துவிடுகிறேன். (அதுசமயம் தலைமை வேலையாள் ரத்னம் பில்கொண்டுவந்தான். பில்லை பார்த்த ராமசாமி, எனக்கு அக்கௌண்ட் இருக்கிறது, பில் தேவையில்லை என்று சொல்லி அந்த பில்லின்மீது ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து பில் பறந்து விடப்போகிறதென்று கிண்டலாகச் சொன்னார், மிக்க நன்றி எஜமான் என்றான் ரத்னம் புன்னகையுடன்.

ராம: (அவனின் முகவெட்டையும், கம்பீரத்தோற்றத்தையும், பேச்சில் தொனிக்கும் இனிமையையும் கண்டு, இதென்ன சாதாரண வேலையாள், அதிலும் ஓட்டல் தொழிலாளி, இவ்வித அம்சங்களோடு இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். ஏன் இவனை நடிகனாக உருவாக்கக்கூடாதென நினைத்தார் போலும்) ரத்னம் என்னை இதற்குமுன் பார்த்திருக்கிறாயா.

ரத்னம்: இல்லைங்கோ எசமான் போனமாதம் தாங்க வந்தேன்

வேலைக்கு, அதுமுதல் இரவு வேலை தாங்க.

ராம: தமிழ் நன்ருகப்பேசுகிருயே எங்கேப்பா படித்தாய்?

ரத்: (குழந்தைகள் தாயிடம் குழைந்து பேசி சிரிக்கும் பாவனையில்) ஈரோடில் எஜமான்.

ராம: விளக்கெண்ணெயைக் குடித்தாள் எப்படியிருக்குமோ அம்மாதிரியாக முகத்தைச் சுளித்துக்கொண்டு, இவன் நம்மையே ஆழம் பார்ப்பான் போலிருக்கிறது. அவனின் கலங்கமில்லாத முகம் அம்மாதிரியானவனாகத் தோன்றவில்லையே) ஈரோடா...புரட்சிகாரர்களின் இருப்பிடமாச்சே!

ரத்: அம்மா மன்னிச்சிக்கனும் உங்களோடிருந்தாங்களே அவங்க நந்தினி அம்மாதானுங்களே.

ராம: ஆம், எதற்கு.

ரத்: சும்மாதானுங்க, நாடகத்தில் பார்த்திருக்கிறேன் ரொம்ப... அழகுங்க, குயில் மாதிரி பாடுவாங்க, மயில்மாதிரி ஆடுவாங்க ம்ன்னிச்சிக்குங்க எஜமான்.

ரா: இவன்நல்லயூகம் உள்ளவன் போலிருக்கிறது. நாடகத்தில் ஆர்வமுள்ளவனுகவும் இருப்பான் எனநினைத்தவாறு, நீ அவளை பார்க்க விரும்புகிருயா, சந்திரிகா தியேட்டரில் பார்க்கலாம் வருகிருயா! (ராமசாமி போகிருர்)

ரத்னம் அவருக்கு நன்றி செலுத்தினன். ராமசாமி போய்விட்டார். அவர்கள் உட்கார்ந்திருந்த சோபாவின் மீது நந்தினியின் சிறுதாவணி இருந்தது, அதனை எடுத்துதன் நிஜார்ஜோபியில் தினித்துக்கொண்டான் ரத்னம். அதே சமயத்தில், ஜமீன்தார் குடும்பம் ஒன்று பக்கத்து அரையில் வந்து இறங்கிற்று. அவர்களிடம் சென்று, குளிர்ந்த பானம் தேவையா என்றுக் கேட்டான், ரத்னம். அதற்கு ஜமீன்தார் உன்னையாரும் கூப்பிடவில்லை, உன் வேலையைப் பார் என்ருர். ஜமீந்தாரோடிருந்த சீமாட்டி. பார்த்திரா அவனை, எவ்வளவு அழகாகவும், ஒழுங்காகவும் இருக்கிருன் இவனுக்கு வேலை ஏதேனும் கிடைக்கவில்லை போலும், ஓட்டலில் பரிமாறும் வேலைக்கு வந்துவிட்டான், ஆளைப்பாரு ஆளை என்ருள். (திரை)

இந்தியாவில் காகித தொழிற்சாலை எந்திரங்கள்

டில்லியிலுள்ள ஒரு காகிதத் தொழிற்சாலை, பிரிட்டனிலுள்ள பால்ஃபர் குழு நிறுவனங்களிடமிருந்து ரசாயன எந்திரங்களை வாங்க முடிவு செய்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலை இமயத்து பைன் மரங்களை உபயோகித்து நாள் ஒன்றுக்கு 90 டன்கள் மரக்கூழ் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

பால்ஃபர் குழு நிறுவனங்கள் பம்பாய்க்கருகில் நிறுவப்பட்டுள்ள ஓர் காகித உற்பத்தி சாலைக்கு வேண்டிய எந்திரங்களை அனுப்பியிருக்கிறது. இந்தத் தொழிற்சாலை மூங்கிலை உபயோகித்து காகிதம் தயாரிக்கிறது.

பால்ஃபர் குழு நிறுவனங்கள் ரசாயனப் பொறியற் சாதனங்களைத் தயாரிப்பதில் உலகப் புகழ் பெற்றவை.

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor

(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

★

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO
SATISFY OUR CUSTOMERS

சிறுவர்களின் எதிர்காலம்?

—[குமரன்]—

கடவுளே நமது இருப்பிடம்; அவரிடமிருந்தே நாம் இப்புவியில் பிறப்பு எடுக்கின்றோம். அவ்வாறு நாம் பிறக்கும்போது (கடவுளிடமிருந்து பிறப்பதால்) ஜோதியுடன் தோன்றுகின்றோம். இந்த ஜோதி அல்லது தெய்வீகத்தன்மை நமது மக்கட்பருவத்தில் நம்மைச் சூழ்ந்து நிற்கின்றது. என்று பாடினர், ஆங்கிலக்கவியான வோட்ஸ்வர்த். (Wordsworth) குழந்தையும் தெய்வமும் ஒன்று, என்று சாற்றும் பழமொழிகளுக்கோ, கவிகளுக்கோ நம்மொழியில் பஞ்சமில்லை. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்" என்பது ஒரு பழமொழி.

தெய்வத்தைப்போற்றி வழிபடுவதுபோல, குழந்தைகளையும் போற்றிவளர்க்கவேண்டும். நம் தமிழ் நாட்டிலே, குழந்தை வளர்ப்பைப்பற்றிச் சொல்லித் தரவேண்டாம். ஒவ்வொரு தமிழனுக்கும், தன் ரத்தத்துடனே ஊறி வந்து இருக்கிறது இந்தக் குழந்தை வளர்ப்புக்கலை. பண்டைத் தமிழ் நூல்கள் எல்லாம் மக்கட் பேற்றைப்பற்றியும் மக்கள் கல்வியறிவை பற்றியும் தெளிவாகக் கூறுகின்றன. ஒளவைப் பிராட்டியார் சிறுவர் சிறுமிகளுக்காக நீதி நூல்களை எவ்வளவோ எளிய நடையில் பாடியிருக்கிறார். வள்ளுவர் பிரான், மக்கட்கு நாம் கொடுக்கவேண்டிய கல்வியை ஒரே குறளில்.

"தம்மிற்றம் மக்களறிவுடை
மை மாநிலத்து
மன்னுயிர்க்கெலாமினிது"

என்று பாடிவிட்டார். தம்மைவிடத்தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக விளங்குவது உலகத்திலுள்ள எல்லா மனிதருக்கும் இயற்கையாக இன்பம் தருவது என்பது இக்குறளின் பொருள்.

சிறுவர் கல்வியைப்பற்றி ஐயமே இல்லாது நம் மூதோர் கூறியபோதிலும், தற்காலத்தில் நம் சிறுவர்களிடம் நாம் எதைக் காண்கின்றோம்? சிறுவர்கள் சங்கங்கள், சிறுவர்கள் பள்ளிகள்; சிறுவர்களுக்கான பத்திரிகைகள் என்று எவ்வளவோ இருக்கின்றன. ஆயினும், நாம் விரும்பும் அளவு நம் சிறுவர்கள் வளர்ந்து வருகின்றனரா, என்பது சிந்திக்கவேண்டிய காரியம். நம் சிறுவர்களின் கையிலேயே நம் நாட்டின் எதிர்காலமும் இருக்கின்றது, என்பதையும் மனதில் கொண்டால், சிறுவர் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம்.

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor.

(Regd. No. 5.)

A:C,C. CEMENTSTOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட் டிகள், கேஷ் பாக்ஸ், வாளி கள், பனைவெல்லக் கொப்ப ரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள் களும், விவசாயக் கருவிக ளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

சில உதாரணங்கள் பார்ப் போம். பதினைந்து வயது வாலி பன் ஒருவன் ரயில் பிரயாணத் துக்குத் தயார் செய்து கொண் டிருக்கிறான். தாய் பெட்டியில் அவனுக்கு வேண்டிய சட்டைத் துணிமணிகளை அடுக்கிவைக்கி றாள். தகப்பனார் வாலிபனைக் கொண்டு படுக்கையைக் கட் டிக் கொள்ளச் சொல்கிறார். அச்சிறுவன் தனக்குப் படுக் கைக் கட்டத் தெரியாது என்கி றான். பிறகு தகப்பனாரே சிறுவ னின் படுக்கையைக் கட்டிக் கொடுக்கிறார். இது எதனால்? ஒரு காரணம், சிறுவன் தாய் தந்தையரின் செல்லத்தில், பிரி வில் வளர்ந்தது. இரண்டாவது காரணம், சிறுவனுக்கு படு க்கை கட்டிப் பழக்கமில்லாதது, மூன்றாவது காரணம், சிறுவ னுக்கு படுக்கையைக் கட்டும் விதத்தைக் காட்டிக் கொடுக் கவோ அல்லது கட்டும்படிச் சொல்லி, ஊக்கம் அளிக்கவோ செய்யாதது.

நம் சிறுவர்களின் இந்நிலைக் குக் காரணம் யார்? நாமும் நம் சூழ் நிலையுமே காரணம், சுதந் திரத்துக்கு முன் ஆங்கில நாட் டினரின் மீது, நமது குறைக ளுக்கு எல்லாம், பழியைச் சுமத்தினோம். ஆனால் சுதந் திரம் பெற்ற பிறகும், இந் நிலையை நாம் நிலவ விட லாகாது. விஞ்ஞானம் வளர வளர, மனிதன் எந்திர வேக மாகக் காரியங்கள் செய்ய வேண்டிவருகிறது. அவனுக்கு ஒரு நாளில் கிடைக்கும் ஓய்வு நேரம் வெகு குறைவு, அப்படிக் கிடைத்திடினும், கேளிக்கைகளி லும், பணப்பெருக்கத்துக்காக

வும், செலவாகி விடுகிறது. இந்த நிலையில், பெற்றோர்க்கு தம் சிறுவர் சிறுமிகளின் கல்வியில் நேராகக் கவனம் செலுத்த முடியாமல் போய் விடுகின்றது. குழந்தைகள் பள்ளி வாத்தியார்களிடமோ அல்லது வீட்டு வாத்தியார்களிடமோ பயிற்சி பெறுகின்றனர். சில செல்வக் குழந்தைகள் வேலைக்காரர்களிடமோ அல்லது ஆயாக்களிடமோ வளர்கின்றார்கள். பொருள் நெருக்கடியாலும் பொருளாதார நெருக்கடியாலும், சமூகத்திலே மதிப்பின்மையாலும், ஆசிரியர்களுக்கும் சிறுவர்கள் சிறுமிகளிடம் கவனம் குறைகிறது. சிறுவர்களும் அரைகுறையாக வளருகிறார்கள்; அரைமனிதனாகிறார்கள் கடைசியில்; முழுமனிதனாவது இல்லை.

இந்தச் சீர்கேடான நிலையை திருத்த முயற்சிகள் நம்நாட்டில் நடந்து வருகின்றன. ஆனால் சிலகுறைபாடுகள் காண்கின்றன. போதிய வேகம் காணப்[illegible]தில்லை. மேலைநாட்டுமுறைகளைக் கண் மூடித்தனமாகக் மேற்கொள்கின்றனர் இச்சீர் திருத்த முறைகளில். நமது பண்பாடுகளை மறந்து விடுகின்றனர்.

சிறுவர் கல்வியில் முக்கியப் பங்கு பெற்றோரும் ஆசிரியரும் பெறவேண்டும். இதற்குப் பிறகு சமூகம். சமூகத்தில் சூழ்நிலையும் இடம் பெறும். இந்தச் சூழ்நிலையில்தான் பத்திரிகைகளின் தொண்டு பயன் படும்.

நம் நாட்டிலே பத்திரிகைகளிலே சிறுவர்கள் பகுதி உண்டு. சிறுவர்களுக்கென சில தனி முழுப்பத்திரிகைகளும் இருக்கின்றன. சிறுவர்களும் அவைகளை வாசிக்கத்தான் செய்கின்றனர். இந்தப் பத்திரிகைகள் "நியூஸ்பிரின்ட்" காகிதத்தில், மிகவும் சிறிய அச்செழுத்தில் வெளிவருகின்றன. கண்கவர் படங்கள் வேண்டுமளவு இல்லை. சிறுவர்களுக்கான தனிப்பத்திரிகைகள் மேலை நாடுகளிலும் உள்ளன. ஆனால் எவ்வளவு வித்தியாசம். மேலை நாட்டுப் பத்திரிகைகள் வழவழப்பான காகிதத்தில், வர்ணப்படங்களுடன், கொட்டை கொட்டையான பெரிய எழுத்துகளில் வெளிவருகின்றன. கதைகளும் கட்டுரைகளும், வேடிக்கைகளும், குழந்தைகளின் வயதுக்கேற்ப அமைந்துள்ளன. சிறுவர்களுக்கான பத்திரிகைகள், குழந்தைகளின் கண்களையும் கருத்தையும் கவரத்தக்கனவாக இருத்தல் வேண்டும், என்ற குறிக்கோளை மேலைநாட்டுப் பத்திரிகைகளில் காணலாம்.

சிறுவர்களின் கல்வியில் முக்கியப்பொறுப்பு தாய்தந்தையரும் பள்ளிவாத்தியாரும், ஏற்றுக் கொள்ளவேண்டும், என்றோம். அவர்களின் பணியில் துணைபுரிய சிறுவர்களுக்கான பத்திரிகைகள் வெளிவரவேண்டும். அப்பத்திரிகைகளின் பொருளடக்கம் என்னவாக இருக்கலாம் என்று ஆராயுமிடத்து, சில அபிப்ராயங்களை மேலவாரியாகக் கூறலாம். பாரதியார் பாடிய பாப்பாப் பாட்டை அடிப்படையாக வைத்துக்கொண்டு பத்திரி

கைளை இயற்ற முயற்சிசெய்ய லாம். பத்திரிகைகளின் விஷயம்; சிறுவர்களுக்குச் சலிப்புத் தட்டாதவையாக இருக்க வேண்டும். ஒரே கதை மயமாக இருந்தாலும் சலிப்பு வந்து விடும். சிறுவர்களின் மூளைக்கும் அலசிப்பார்க்கும் தன்மை உண்டு என்பது ஞாபகம்இருக்கட்டும். "பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் சண்டை நடந்தால் யார் ஜெயிப்பார்கள்" என்று சிறுவனொருவனிடம் வினவியபோது அவன் கேட்டான் "பறவைக்காகவும் மிருகத்துக்காகவும் சண்டை ஏன் உண்டாகவேண்டும்' ஒன்று மரங்களிலும் வானத்திலும் வசிக்கின்றது. மற்றொன்று 'பூமியிலே வசிக்கின்றது. அப்படி சண்டை நடந்தாலும், பறவைதான் ஜெயிக்கும், ஏனென்றால் அவைகள் மிருகங்களைக் கொத்தி துன்புறுத்திவிட்டு மேலே பறந்துவிடுமே." சிறுவனின் தர்க்கத்தின் உண்மையையும் ஒரு விதத்தில் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இவ்வாறு கதை சொல்பவரின் மூளையைக் கிளறும் சிறுவர்களும் இருக்கின்றார்கள். சிறுவர்களுக்கான கதைகள் பெரும்பாலும்நடக்கக் கூடியவையாகவும், நம்பத்தக்கதாகவும் இருக்கவேண்டும். பிசாசுக்கதைகளும், மோகினி கதைகளும் கொஞ்சம்கொஞ்சம் வேண்டியதுதான். ஆனால் அளவு மீறினால் சுவைகுன்றும். சிறு வாழ்க்கை வரலாறுகள், தேச சரித்திரக் கதைகள், பூகோளக் குறிப்புகள், விளையாட்டுகள், இயற்கையறிவு, கலாசாரம், இவைகள் எல்லாம் சிறுவர்களுக்கான பத்திரிகையில் இடம் பெற வேண்டும். முக்கியமாக சிறுவர்கள் பத்திரிகைகள், சிறுவர்களின் எழுத்துத்திறமைக்கும் இடமளிக்க வேண்டும். அவர்கள் எழுதி அனுப்பும் கதைகளும், கட்டுரைகளும் திருத்தப்பட்டு அவர்கள் பெயரிலேயே வெளியிடப்பட வேண்டும். அவர்களுக்கு சிறுசிறு சன்மானமும் அளிக்கவேண்டும். பத்திரிகைகளில் தலவரலாறுகளையும் சிறுவர்களைக்கொண்டே எழுதச் சொல்லலாம்.

அனேகர் சிறுவர்கள் பத்திரிகைகளை வெளியிடத் தயங்குவது, அவைகள் வேண்டிய லாபம் தராது என்ற காரணத்தினால். ஆனால் நம் நாட்டிலே இப்போது மலிவுப்பதிப்பு யுகம் துவங்கி இருக்கின்றது. சிறுவர்கள் பத்திரிகைகளிலும் மலிவுப் பதிப்பாக வெளி வந்தால் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் வாங்குவர் என்பது திண்ணம். அவ்வாறு வந்தால், லாபம் கட்டாயம் கிட்டும்.

தேசத்துக்காகத் தியாகம் செய்த சீமான்கள் முயற்சி செய்தால் எதுதான் நடக்காது. எந்தகாரியமும் நிறைவேற தியாகமும் முயற்சியும் தான் அடிப்படை. பணம் தானே வரும்.

தமிழன்னையின் தண்ணருளால் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் என சீரிய பத்திரிகையொன்றை "தொழில்" ஈந்தருளுமாக!

●

பருந்து தந்த விருந்து!

—[நா. சிகாமணி]—

1. காகம்கண் திறக்குமுன்பே துயில் எழுந்தார்;
காளான்நிற கழுதைமேல் மூட்டை வைத்தார்;
தாகம்தீர் தண்ணீரை நோக்கிப் போந்தார்;
தாளாப்பெரும் பசியோடு வேலை கொண்டார்
வேகம்தான் குறையவில்லை வேலை மாட்டு
வேண்டாத கோடையிடை வெந்தார்; நொந்தார்!
மேகம்தான் சென்றோடி குடை பிடிக்கும்!
மேதினியில் இவர்களது தாழ்வும் வாழ்வோ?

∴ ∴ ∴ ∴

2. சோகம்நிறை கண்ணோடு திரும்பி வந்தார்;
சோறின்றி சுருண்டுவிழும் குழந்தை கண்டார்!
ஓதம்விரை குடிசைக்குள் தாயார் ஓடி,
ஓராமல் பானைதனில் கையை விட்டாள்
வேதமோதும் பூனைகண்டான்; புலம்பி நின்றாள்;
வேரற்ற மரம்போல சோர்ந்து வீழ்ந்தாள்!
பாபமென்று பரிந்தோடி வந்து, வண்ணார்
சாகாமல் சாகும் நிலை தீர்ப்பார் உண்டோ?

∴ ∴ ∴ ∴

3. ஏர்பிடித்து களர் திருத்தும் உழவன் போன்று
கார்போன்ற ஆடைதனைக் கல்லிற் தட்டி,
பார்முழுதும் தூய்மைசெய்வார்; பருக்கை காணார்!
பேர்பெற்ற மாந்தரெல்லாம் இதனைப் பாரார்!
தார்சூடி 'கார்'ஓட்டி வாழ்வார், வண்ணார்
சோர்ந்துவிழும் பசிபோக்கார்; சமயம் வந்தால்,
மார்தட்டிப் பேசிடுவார்; 'ஓட்டு' கேட்டு
மாலைதனை மாட்டிக்கை தட்டி போவார்!

4. "நீண்டகாலம் பெரும்செலவில் படித்துப் பின்னும்,
நீங்காமல் மருத்துவத்தில் புலமை கண்டும்
தாண்டவரும் தேர்விலெல்லாம் வெற்றி கொண்டும்,
தொண்டுசெய்யும் பண்டகரும். கல்வி இல்லா
சாணகத்தி நாவிதனும் ஒன்று" என்றார்.
ஆண்டவனும் தலைவணங்கும் காந்தி அண்ணல்
மாண்புடையார் பிறந்தநாட்டில் வண்ணார் வாழ்வு
மாறுபட்டு மடிவதேனோ அறிந்து சொல்வீர்?

தமிழ் நாட்டு நார்மன் ராக்வெல்லர்கள்

தென்னாடு, பெருமை அடைகிறது; பூரிப்பும் கொள்கிறது; ஓவியர்களையும். கலைநுட்ப நிபுணர்களையும், தென்னாடு ஈன்று, அவர்கள் மூலம், உலகத்திலுள்ள மூலை முடுக்குகளில், தன்னுடைய கலைமணத்தைப் பரப்பிய பெருமை, தென்னாட்டுக்குச் சாரும் என்பதையாரும் மறுக்கமாட்டார்கள். கலை உலகத்திலே, அழியாக் கலையை சிருஷ்டித்த, கலைக்கூட மன்னர்கள் ஓவியர் பாலு சகோதரர்கள் என்றால் அது மிகையாகாது. கலையும் பாலு சகோதரர்களும் ஒன்றிவிட்டார்கள்; அவர்களைத் தமிழ் நாட்டு நார்மன் ராக்வெல்லர்கள் என்று கூறலாம்.

ஓவியர் பாலுசகோதரர்களின் கலையை பாராட்டாத தலைவர்கள் இல்லை என்றே கூறி விடலாம்: இந்திய பிரதமர் ஸ்ரீ நேரு, ஸ்ரீ தேபர், ஸ்ரீ. பிரகாசா. சென்னை முதன் மந்திரி, கனம். கே. காமராஜ், உள்நாட்டு மந்திரி. கனம் பக்தவத்சலம், நிதிமந்திரி கனம். சி. சுப்பிரமணியம். டாக்டர் ஆர். பி. சேதுப்பிள்ளை ஸ்ரீ. கி. வா. ஜெகன்னாதன், டாக்டர் மு. வரதராசன் ஸ்ரீ. ம. பொ. சிவஞானம், ஸ்ரீ சி. இராஜகோபாலாச்சாரி, ஸ்ரீ ராஜாராம் நாயுடு, ஸ்ரீ வ. உ. சி. சுப்பிரமணியம் ஆகிய எல்லாத் தலைவர்களும், கலைஞர்களும், ஓவியர் பாலு சகோதரர்களை வானளாவ வாழ்த்தி இருக்கிறார்கள்; அரும் பெரும் தலைவர்கள் வாழ்த்துக்களைப் பெற்ற பாலு சகோதரர்கள் கலைத்திறமையை வார்த்தைகளால் வருணிக்கமுடியாது. பாராட்ட நாம் புகுந்தால், பக்கங்கள் போதாது.

கண்கவரும் கலைக்கண்காட்சிகள் பல அவர்கள் அமைத்துள்ளார்; அவர்கள் ஓவியத்தில் உயிர் உண்டு. தருச்சி ஜில்லாவில் நடந்த கலைவிழாவில் பாலுசகோதரர்கள் கலைக்கண்காட்சி ஒன்று அமைத்திருந்தார்கள் ஸ்ரீ ரர்ஜாஜி அவர்கள் திறந்துவைத்தார்; அவர்.பாலு சகோதரர்கள் திறமையை நன்கு பாராட்டினார்.

சென்னை ராஜாஜி ஹாலில் 11—11—58ல் ஓவியர் பாலு சகோதரர்களின் கலைக் காண் காட்சி இடம் பெற்றது சென்னை முதல் மந்திரி ஸ்ரீ காமாராஜ், அந்தக்காட்சியை பார்த்து மிகவும் பாராட்டியுள்ளார்.

பாலுசகோதரர்களின் கலைமணம், இந்தியாவில்; ஏன் உலகமுழுவதிலுமே பரவுகிறது. தென்னாடு பெருமை கொள்கிறது; தான் பிறந்த் நாட்டின் புகழை திக்கெட்டும் பறைசாற்றும் பாலுசகோதரர்களை நாம் பூரிப்போடு வாழ்த்துகின்றோம் ஓவியத்துறையில் அழியாப்புகழடைந்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த நார்மன் ராக்வெல்லர்கள்;

ஓவியர் பாலு சகோதரர்கள் தீட்டிய படத்தை சென்னை முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் பார்வை யிடுகிருர்.

அவர் தீட்டிய உயிருள்ள ஓவியங்கள், பலஉண்டு. ஆகவே தான், ஓவியர் பாலுசகோதரர் களை தமிழ்நாட்டு நார்மன் ராக் வெல்லர்கள் என்று கூறுகின் ரேம்.

இந்தியாவின் கலைத்திறமையை உலகத்திலுள்ள மக்களுக்கு எடுத்துக்காட்ட தமிழ் நாட்டு ராக்வெல்லர்களான பாலுசகோதரர்களை ஒரு நல்ல கருவியாக நம் சர்க்கார் உப

வோபிக்கவேண்டும்; மத்திய சர்க்கார், பாலுசகோதரர்களை, வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும், அனுப்பி வைத்தால் நிச்சயமாக நம்முடைய புகழ் பெருகும்; நமக்கும் பெருமை கொடுக்கும்; வெளிநாட்டிற்கு பாலுசகோதரர்களை அனுப்பிவைக்கவேண்டுமென்று தொழில் வற்புறுத்துகிறது.

———

குருடர்களுக்கு மேல் படிப்பு

படிக்க உபகாரச் சம்பளம்

குருடர்கள், பள்ளிப்படிப்பு முடிந்த பின்பு, அதற்கும் மேற்பட்ட படிப்பு படிப்பது சம்பந்தமாக, உபகாரச் சம்பளம் அளிக்க இந்திய அரசாங்கம் முன் வந்துள்ளது. குருடான 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள், மேல்படிப்பு படிக்கவோ அல்லது தொழில் நுணுக்கப் படிப்பு அல்லது தொழில் பயிற்சி பெறவோ விரும்பினால் மனுச்செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்க கல்வி இலாகாகாரிய தரிசி, (எஸ். டபிள்யூ 5) புதுடில்லி என்ற முகவரியில் எழுதிக் கெட்டு பூரா விவரங்களையும் விண்ணப்ப பாரங்களையும் பெறலாம். மனுக்கள் இந்திய அரசாங்க கல்வி இலாகாவுக்கு 15—7—1959க்குள் கிடைக்க வேண்டும்.

பொன்மொழி

உள் நாட்டிலே கட்சிப் பிளவை அனுமதிக்கும் ஒரு தேசத்திற்கு அயல் நாட்டிலே பெருத்த அவமரியாதை கிட்டும். —லிங்கன்.

ரவி & கோ.,

(ரிஜிஸ்டர் நெ. 116)

உடுமலைப்பேட்டை P. O.

(கோவை ஜில்லா)

●

மாத தவணைகள் மூலம், ஜமுக்காளம் வினியோகம் செய்ய கண்யமான ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் தரப்படும்.

15 nP. ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

சிறு தொழில்கள் இன்றேல் பெருந் தொழில்கள் இல்லை!

அமெரிக்கப் பொருளாதாரமா? அங்கே எல்லாம் பெரிய பெரிய கம்பெனிகளுக்குத்தான் இடம். அவை மட்டுந்தாம் வாழும் என்பதாக ஓர் எண்ணம் பலருடைய மனத்திலும் படர்ந்திருக்கிறது. செப்டம்பர் மாதத்திலே சென்னை நகருக்கு அமெரிக்கச் சிறு தொழில்கள் கண்காட்சி வருகிறது. அப்போது அந்தத் தப்பான எண்ணம் தரைமட்டமாகப் போகிறது.

ஆயிரம் சிறு தொழில்கள் நடந்தால்தான் பெருவாரி உற்பத்திப் பெருந் தொழில்கள் நடைபெற முடியும். உதாரணமாக, மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றுக்குவேண்டிய உறுப்புகள் ஐந்து லட்சம் சிறு தொழில்களிடமிருந்து கிடைக்கின்றன. இந்தச் சிறு தொழில்கள் சிலவற்றில் முப்பது பேர் வேலை செய்வர்; இன்னும் சிலவற்றில் மூன்றே மூன்று பேர்தாம் இருப்பர். இவ்வாறு சிறு தொழில்கள் இல்லாமல் பெருந் தொழில்கள் வாழா என்பதை அமெரிக்கப் பொருளாதாரம் பற்றித் தடைவிடை போட்டுப் பேசுவோர் பெரும்பாலும் மறந்து விடுகின்றனர்.

அமெரிக்கக் கம்பெனிகளில் பெரும்பான்மையும் சிறியவைகளே. அமெரிக்காவில் 45 லட்சம் தொழில்கள் இருப்பதாகக் கணக்கு. இவற்றில் ஐந்தில் மூன்று பங்கு நான்கு பேர்களுக்கும் குறைவாக வேலை செய்பவையாகும்.

புதுமுறைகள் தோன்றுமிடம்

தொழில் துறையில் புதுப் புதுக் கருத்துக்களும், புதுப் புது முறைகளும், விஞ்ஞானப் புதுமைகளும் தோன்றுவதற்குச் சிறு தொழில்களேநாற்றங்கால்கள். அமெரிக்கப் "பேடண்டு" அலுவலகம் வெளியிடும் புள்ளிவிவரம் இதற்குச் சான்று. 1921-க்கும் 1938-க்கும் இடையே பதிவான உரிமைப் பதிவுகளில் நூற்றுக்கு 43 தனித்தனியாட்கள் பதிவு செய்தவை; நூற்றுக்கு 34·5 சிறு தொழில்களும் நடுத்தரத் தொழில்களும் பதிவு செய்தவையாகும். ஆகவே, உரிமைப் பதிவுகள் எல்லாவற்றிலும் நூற்றுக்கு 77 சிறுசிறு தொழில்களாலும் தனித்தனி மக்கள் முயற்சிகளாலும் ஏற்பட்டிருக்க, பொருளாதார வளர்ச்சிக்கு இத் தொழில்கள் எவ்வளவு முக்கியம் என்பதுசொல்லாமலே விளங்கும்.

சிறு தொழில்கள் பெருவாரியாகப் பெருகியிருக்காவிட்டால்

சிறு தொழில்கள் மூலம் தயாரான பீங்கான் பாத்திரங்கள், பந்திச் சாமான்கள் முதலியன. கண்ணையும், கருத்தையும் கவரும் எழில் உள்ளவை இவை.

உற்பத்திப் பண்டங்களும் உழைப்புப் பணிகளும் இன்றிருப்பது போல் இவ்வளவு வகை வகையாகக் கிடைக்கமாட்டா. சிக்கனமும், பெருவாரி உற்பத்தியும் மட்டுமே குறி என்று நடைபெறும் சிற்சில பெரிய கம்பெனிகள் மாத்திரம் இருக்குமானால், பண்டங்களிலும் பணிகளிலும் இத்தனை வகை இருக்க மாட்டா என்பதற்கு ஐயம் இல்லை. பற்பல வகையான உற்பத்தியாளர்கள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு உற்பத்தி செய்வதால், பொருள்களும் பணிகளும் எண்ணிக்கையாலும் உருவ அமைப்பாலும் தரத்தாலும் பெருகப் பெருவாய்ப்புக் கிடைக்கிறது.

செய்த பொருள் எளிதில் விற்க வேண்டும் என்பதற்காக, விலைக்குத் தக்கவாறு உயர்ந்த பொருள்களைத் தயாரித்து விற்க ஒவ்வொருவரும் முற்படு

கொம்பு ஊதுவதாக நினைக்க வேண்டாம்! கண்ணுடிச் சாமான்கள் செய்கிருர்கள். இளகிய நிலையிலுள்ள கண்ணுடியைக் குழாய் மூலம் ஊதி, கூஜா, புட்டி முதலியன செய்வார்கள்.

இன்றனர். இவ்வாறு எத்தனை எத்தனையோ பேர்கள் முயற்சி செய்வதால், புதுக் கருத்துக்கள் தோன்றுகின்றன; புதுப் பண்டங்கள் உருவாகின்றன. சிறந்த கச்சாப் பொருள்கள்

பயனாகின்றன; சிறந்த பணிகள் கிடைக்கின்றன.

வேலை வாய்ப்புகள்

ஓர் ஊரில் சிறு சிறு தொழில்களாகப் பல தொழில்கள் இருப்பது, தொழிலாளர்களுக்கும் நல்லது. வேலை வாய்ப்பு மட்டுமல்ல; விரும்பிய இடத்துக்கும் வேலைக்குப் போகலாம்.

சிற்சில பெரிய கம்பெனிகளைத் தவிர வேறு தொழில்கள் இல்லையென்றால், தானாகவே தொழில் வைத்து நடத்தவும், தன் தகுதியை மெய்ப்பிக்கவும் வாய்ப்புகள் குறையும். கருத்துக்களும், ஆவலும், சிறிது முதலும் உள்ளவர்கள் தமது கருத்துக்களை நிறைவேற்றிப் பார்க்கவும், ஆவல் கைகூடுமா என்றறியவும், தமது மூலதனத்தைப் பயன்படுத்தவும் வழியில்லாமல் போவார்கள். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறும் இளைஞனும் சமுதாயத்தின் பொருளாதாரத் துறையில் தனக்கென ஓரிடம் இல்லாதவனாகப் போவான்.

உற்பத்தி, பணி, விநியோகம் ஆகிய துறைகளில் பற்பல சிறு சிறு தொழில்கள் நடப்பது ஊருக்கு அழகுமாகும். மக்கள் சுய சிந்தனையும் பொறுப்புணர்வும் உள்ளவர்களாக வாழவும் அது உறு துணையாகும். ஜனநாயக நாட்டினர் அத்தகைய சிந்தனையும் பொறுப்புணர்வும் உள்ளவர்களாக இருப்பது இன்றியமையாத ஒன்று.

நொடிப்புக்குக் காரணம்

சுதந்திர சமுதாயத்தில் வேலை வாய்ப்புச் சுதந்திரம் உண்டு என்றாலும், தொழிலில் இறங்குவோர் எல்லோருக்கும் பலன் உறுதி என்பதில்லை. பலன் காண வேண்டுமானால், முடிவு செய்யும் திறனும், நிர்வாகத் திறனும், அனுபவமும் முக்கியமாக இருக்க வேண்டும். இதனால் தான் அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகள் முடிவடையாத கம்பெனிகள் பல முறிந்து விடுகின்றன. அந்நாட்டில் தொழில் நொடிப்பு ஏற்படும் கம்பெனிகளில் மிகப்பெரும்பாலானவை இவைகளே.

நிர்வாகத் திறன் சரிவர அமையாமையே சிறு தொழில்களுக்குள்ள பெரிய இடையூறு. நிர்வாக நுட்பங்களைச் சிறு தொழில் நிர்வாகிகள் அதிகமாக அறிந்து கொள்வதற்கு அமெரிக்காவில் பல வழிகள் கையாளப்படுகின்றன.

அரசாங்க உதவி

தொழில் நடத்துவோர் நிர்வாகத் தலைமையில் பயிற்சி பெறுவதற்கு அரசாங்கஸ்தாபனங்கள் உதவிபுரிகின்றன. உதாரணமாக, சிறுதொழில் நிர்வாகம் என்னும் ஸ்தாபனம் 1954 முதல் இத்தகைய பயிற்சியளித்து வருகிறது. அதன் திட்டப்படி பயிற்சியளிக்க 155 கல்வி நிலையங்கள் முன் வந்து உதவுகின்றன. ஆடவரும் பெண்டிருமாக 13,500 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

கைத்தறி இந்நாட்டில் மட்டும்தான் இருக்கிறதென நினைக்க வேண்டாம். அமெரிக்காவில் ஒரு பெண்மணி கைத்தறியில் திரைச்சீலை நெசவு செய்வதைப் படத்தில் காணலாம்.

வகுப்புகள் பொதுவாக மாலை நேரத்தில் நடைபெறும். இது எட்டு வாரப் பயிற்சி.

வெளிநாடுகளில்....

அமெரிக்க அரசாங்கம் தன்னுடைய தொழில் நுட்ப

குடும்பச் சூழ்நிலையில் சிற்பங்கள் செதுக்கும் சிற்பி. மண்ணினால் செய்த உருவத்தைப் பாருங்கள். படமே பேசும்; விளக்கம் வேறு தேவையில்லை.

உதவித் திட்டத்தின்படி அநேக வெளி நாடுகளிலும் நிர்வாகத் துறைப் பயிற்சி வகுப்புகளுக்கு ஆதரவளித்து வருகிறது. இந்தியா, ஈரான், துருக்கி, ஜோர்டான், ஈராக், பாகிஸ்தான், இந்தோனேசியா முதலிய வளர்ச்சியுறும் நாடு

ஓராண்டுக்கு குறைக்கக்கூடாது?

கைத்தறி துணிகளுக்குத் தரப்படும் விசேஷ ரிபேட்டை 6 காசிலிருந்து 4 காசாகக் குறைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று யூனியன் வர்த்தக தொழில் மந்திரி ஸ்ரீ. லால்பகதூர் சாஸ்திரி கூறியுள்ளார்.

இந்த விசேஷ ரிபேட் கைத்தறிவாரத்திலும், மேற்கொண்டு ஒருவாரமும் மட்டும் தரப்படும் என்றும் அவர் சொல்லியுள்ளார். மொத்தவியாபாரிகள் வர்த்தகத்தில் தரப்படும் ரிபேட் 6 காசிலிருந்து 3 காசாகக் குறைக்கவும் அரசாங்கம் முன் வந்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் அகில இந்திய கைத்தறி போர்டின் 13வது கூட்டத்தில் பேசிய ஸ்ரீ. லால் பகதூர் சாஸ்திரி மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போது அளிக்கப்பட்டு வரும் ரிபேட் குறையினுல் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் பற்றியும் பிரதிகூலங்கள் பற்றியும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. அதனுல் கைத்தறி தொழிலுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. என்பதில் சந்தேகமில்லை என்று ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

நெசவாளர்கள் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது, அவர்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி துணிகள் போதுமான அளவு விற்பனை செய்யப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன; மேலும், பொதுமக்களின் மில் துணிகள் மேல் ஏற்பட்டி

களில் இத்திட்டம் மும்முரம்.

பொதுவாக அமெரிக்காவில் சிறு தொழிலுக்கும் பெருந் தொழிலுக்கும் நேரடியான போட்டி கிடையாது. அவை ஒன்றுக்கொன்று உதவியாக உள்ளன. பென்னம் பெரிய கம்பெனிகள் பல தமது உற்பத்திப் பண்டங்களுக்குரிய உறுப்புகளைச் சின்னஞ் சிறிய கம்பெனிகள் பலவற்றிலிருந்து வாங்கிப் பொருத்தி உருவாக்குபவை.

சில வேலைகளுக்குச் சிறிய தொழில்களே சாலச் சிறந்தவை; மற்றும் சில வேலைகளுக்குப் பெரிய கம்பெனிகள். மிகத் தகுந்தவை. இரண்டின் கதியும் இறுதியாய் அவற்றின்பொருள்களை வாங்கும் அமெரிக்க மக்கள் கையில்தான் உள்ளது.

குக்கும், மோகம் குறைய வில்லை; கைத்தறி துணிகளை விட மில் துணிகள் நைஸாகவும் அழகாகவும் இருப்பதால், மில் துணிகளோடு கைத்தறி துணிகள் போட்டி போடமுடிய வில்லை நெசவாளர்களுக்கு கைத்தறி துணி உற்பத்தி செய்வதில், கொஞ்சம் ஆர்வமும் உற்சாகமும் இருந்தது சர்க்காரின் விசேஷ "ரிபேட்" டுதான் உண்மையிலேயே நெசவாளர்களின் துயரத்தைத் துடைக்கும் ஒரு ஒப்பற்ற கருவியாக இருந்து வந்தது. விசேஷ ரிபேட் 6 காசிலிருந்து 4 காசாக தற்போது குறைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது என்று ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி குறிப்பிட்டுள்ளதை சிறிது ஆராய்ந்து பார்க்கவேண்டும்; இந்த சூழ்நிலைமையில், தற்போது கொடுத்துவரும் ரிபேட்டை குறைப்பது அவ்வளவு நியாயமானதல்ல நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்; கைத்தறி துணி உற்பத்தியும் குறையும்; தற்போது கைத்தறி அணிந்து வரும் ஒரு சிலர் கூட, போதுமானபடி கைத்தறி துணி மார்க்கட்டுக்குவார்டில், கைத்தறி துணி வாங்கி அணிவதை விட்டு விட்டு, மில் துணி அணிய ஆரம்பித்து விடுவார்கள்: ஆகவே கைத்தறிதொழிலுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்றால், அரசாங்கம் தற்போது கொடுத்துவரும் ரிபேட்டின் அளவை குறைக்கக் கூடாது; இன்னும்ஓராண்டாவது நீடிக்க வேண்டும்; கைத்தறி தொழில் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டு இயங்க ஆரம்பித்ததும், இந்த ரிபேட்டின் அளவை குறைப்பதுசம்பந்தமாக யோசிக்கலாம். இந்த விஷயத்தில், மாகாண சர்க்கார், மத்திய அரசாங்கத்தினிடம் அணுகி, நெசவாளர்கள் துயரக்கண்ணீரைத் துடைக்கமுன்வர வேண்டுமென்று தொழில் பத்திரிகை வற்புறுத்துகிறது.

ஒழுங்கும், அறிவாற்றலும் கடியதான ஜனநாயகம் உலகிலேயே மிகச் சிறந்ததாகும். துவேஷமும் அறியாமையும் மூட நம்பிக்கையும் நிறைந்த ஜனநாயகம் தன்னைத்தானே குழப்பத்தில் ஆழ்த்திக் கொள்வதுடன் அழிவையும் தேடிக் கொள்ளும். —காந்தி.

எழுதுகிறவர்களுக்கு !

'தொழில்' பத்திரிகையில் கதைகள் கட்டுரைகள் வெளியிட விரும்புகிறவர் தெளிவாக எழுதி ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். ஒரே பக்கத்தில், தெளிவாக எழுதப்படாவிடில், கதைகளோ, கட்டுரைகளோ பிரசுரிக்க எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஆசிரியர்

தொழில்

பட்டிக்காட்டுப் பெண்.

[S. தனலக்ஷிமி]

பாத்திரங்கள்: தாய், ரவி, கண்ணம்மா, மீனு, சுந்தரம்.

ரவி: கண்ணம்மா...ஏ, கண்ணம்மா...

கண்: என்ன கூப்பிட்டீங்களா?

ரவி: ஆமாம். குளிக்கிறேனே தெரியல்லே, போய் டவல் கொண்டுவா.

கண்: உங்களுக்கு எதுக்குங்க அந்த வேலே.

ரவி: (கோபமாக) சொன்னதை செய் போய் கொண்டு வான்னு வரணும்.

கண்: சரிங்க. (உள்ளேபோய் ஒரு தவலேயோடு திரும்பி வருகிருள்,) இந்தாங்க தவலே.

ரவி: கண்ணம்மா! உன்னே டவல் கேட்டேனு, தவலே கேட்டேனு, (கோபமாக கூப்பிடுகிருன்) அம்மா...அம்மா...

தாய்: (வந்துக்கொண்டே) ஏண்டா ரவி. ஏன் அப்படி கத்தறே.

ரவி: பாரம்மா, பார்: ஆசையா, வேண்டும் என்று கட்டி வைத்தாயே. அந்த மருமகளேப் பாரம்மா. டவல் கேட்டால் தவலே கொண்டு வருகிருள்.

தாய்: என்னமோ ரவி, பட்டிக்காட்டுப் பெண், பட்டணத்துக்குப் புதுசு. எல்லாம் போகப்போக சரியாகப்போகும்.

ரவி: சரி, சரி உங்க மருமகள் செய்யறதெல்லாம் உங்களுக்குத்தான் பிடிக்கும். எனக்கு ஆபீஸுக்கு நாழியாச்சுசீக்கிரம் டிபன் கொண்டு வரச்சொல்லுங்க:

கண்: மாமி...எந்த டிபனே கேட்கிருரு. பித்தளே டிபனு, இல்லே அலுமேனியமா.

தாய்: அதெல்லாம் இல்லே கண்ணம்மா நாஸ்தா.

கண்: ஓ ... ஹோ ... நாஸ்தாவா...இதோ கொண்டுவருகிறேன் (உள்ளே போகிருள்.)

தாய்: சரி! அவள் முகத்தைப் பார்த்தாயா. கள்ளம், கபடம் இல்லாதவள். இந்த பட்டணத்திலே பழகிட்டா, அவளேப் போல கெட்டிக்காரியே இல்லே.

ரவி: போதும் நிறுத்துங்க. இந்தச் சனியனேடே நான் எப்படித்தான் வ ப்போகிறேனே

தாய்: ரவி! உனக்கு என் மேல் தானே கோபம், படித்த உனக்கு படிப்பில்லா தவளை கல்யாணம் செய்தேனென்று சபிக்கிறாயா? யோசித்துப்பார். படிப்பு அவசியமா? பண்பு அவசியமா? நல்ல அறிவும் திறமையும் இருந்தால் படிச்சவள் என்ன செய்ய முடியும்.

ரவி: அம்மா, பேசாமல் இருங்க. கண்ணம்மா வருகிறாள்.

கண்: டிபன், சாப்பிடுங்க.

ரவி: (அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டு விட்டு) அம்மா, நான் போயிட்டு வரேனம்மா.

தாய்: போய் வா, ரவி.

கண்: மாமி, அவர் என் கிட்டே சரியாகவேப் பேசமாட்டேன்றாரே எதுக்காக?

தாய்: நீ கொஞ்சம் தைரியமாய் இருக்கணும். எதையும் மனசிலே வச்சிக்கக்கூடாது.

கண்: (கவலையோடு உட்கார்ந்து கொண்டிக்கிறாள்) அங்கே மீனா வருகிறாள்)

மீனா: அண்ணி ஏன் ஒரு மாதிரி இருக்கே? அண்ணா ஏதாவது சொன்னாரு?

கண்: மீனா நான் பேசறதே உங்க அண்ணாவுக்கு பிடிக்கலையாம் இங்கிலிஷ் பேச எனக்குத் தெரியல்ல, என்ன செய்யட்டும்.

மீனா: (சிரித்துக் கொண்டே) போகட்டும் அண்ணி கவலைப் படாதே. நான் உனக்கு இங்கிலிஸ் சொல்லி கொடுத்து பேச வைக்கிறேன். அப்புறம் பாரேன், அண்ணா உன்னை விட்டு பிரிய மாட்டார்.

கண்: போ மீனா! கேலிப் பண்ணாதே,

மீனா: ஐயையோ! டைம் ஆச்சு நான் காலேஜுக்கு போய்வரட்டுமா அண்ணி.

கண்: ஏ மீனா இத்தனை நாளா காலேஜிக்கி போய் வரியே புதுசா ஏதாவது மிருகம்வந்திருக்கா? செத்த காலேஜிக்கு போறியா இல்ல உயிர்காலேஜிக்கு போறியா.

மீனா: போதும் நிறுத்து! (அழுதுகொண்டே) எங்களையெல்லாம் பார்த்தால் உன் கண்ணுக்கு மிருகமா தெரியுதா. இப்படியெல்லாம் பேசுகிறதாலேதான் அண்ணா கோபிச்சுக்கிறாரு.

கண்: (கெஞ்சலோடு) நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேன்னா. என்னை மன்னிச்சிடு. மீனா. (அங்கே தாய் வருகிறாள்)

தாய்: கண்ணம்மா என்னம்மா நடந்தது, ஏன்? மீனா அழுறா?

மீனா: பாரும்மா அந்த அண்ணியை. அர்த்தத்தையெல்லாம் அனர்த்தம் பண்ணுது.

தாய்: அதுக்கா ஏன் இப்படி கோபிப்பானே விவரமா சொன்னா தெரிஞ்சுக்கிரு. அவள்

உன்னை விட புத்திசாலி தெரியுமா?

மீனு: சரிம்மா (அண்ணியைப் பார்த்து) அண்ணி நான் செத்தகாலேஜுக்கும் போகலே உயிர் காலேஜுக்கும் போகலே படிப்பதற்காக குயின்மேரிஸ் காலேஜ்ஜுக்குப் போறேன். புரியுதா?

கண்: புரியது. நீ போயிட்டு சீக்கிரமா வந்திடுஎன்ன (மீனு போய்விடுகிருள்.)

தாய்: என்னகண்ணம்மா சிலையா நிற்கிருயே? இங்கே பாரு. ஏதையும் நினைச்சு கவலைப்படாதே. வா.

(ரவி தன் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிருன். அவனுடைய சிநேகிதன் சுந்தரம் வருகிருன்)

ரவி: வாப்பா சுந்தரம் வா. ஏன் இன்றைக்கு இவ்வளவு நேரம்.

சுந்த: என்ன செய்வது ரவி. என் தலையெழுத்து. பெண்ணுய்ப் பிறக்காதது தான் குறை.

ரவி: ஏன் சேலைக் கட்டிக்கணும்னு ஆசையாயிருக்கா?

சுந்த: மூடுடா வாயை. என் நிலையிலே நீ இருந்தால் நிச்சயம் சந்நியாசம் வாங்கிப்பே.

ரவி: சுந்தரம், நீ ஏன் இப்படி சுற்றி வளைச்சு பேசுறே விவ்ரமாச் சொல்லு.

சுந்த: சொல்லுகிறேன் கேள் ரவி. பட்டணத்து காரியாம். படித்தவளாம், பலே ராங்கிக் காரியடா என் மனைவி. அந்தப் பிசாசுக்கிட்டே அகப்பட்டுக் கொண்டுதானடா இப்படித் தவியாய் தவிக்கின்றேன்.

ரவி: சுந்தரம்! உன் மனைவியைப் பற்றி இன்னொருவர் முன்னுலே இப்படியெல்லாம் பேசக் கூடாது. குடும்பம் என்ருல் எவ்வளவோ இருக்கும்.

சுந்த: உற்ற சிநேகிதனை உன்னிடம் கூடவா சொல்லக் கூடாது? மனதிலுள்ள குறையை உண்மை நண்பனிடம் சொல்லிக் கொள்வதால் மனக்கவலை குறையும் என்பார்கள் இது தெரியாதா உனக்கு?

ரவி: சரி, சரி உன் மனதிலுள்ள குறைதான் என்ன? சொல்லு.

சுந்த: ரவி! என் மனைவி பணத்திலே புரண்டவளாம், பகட்டிலே வளர்ந்தவளாம், ஏட்டுக் கல்வி நிறைய படித்தவளாம், வேறெதுவுமே தெரியாதாம் அவளுக்கு, பாவம் சமையற்கலை என்னும் புத்தகத்தை பக்கத்திலே வைத்துக் கொண்டு அளந்து...அளந்து போடுகிருளடா. அலுவலகத்திலே செய்யும் சமையலைவிட உயர்ந்ததா இது. அதுதான் போகட்டும் அழும் குழந்தையை யாவது கவனிக்கிருளா. நன்ருக குறட்டை விட்டு தூங்குகிருள். நான் எழுந்து பாட்டுப்பாடி தூங்க வைக்கிறேன்.

ரவி: உனக்குத் தாலாட்டுக் கூடப் பாடத் தெரியுமா!

சுந்த: அதுமட்டுமா! அதி காலே ஐந்து மணிக்கு எழுந்து வீட்டைப் பெருக்கி, காபி போட்டு, நான் குடித்து விட்டு, அவளுக்கும் வைத்து விட்டு மற்ற என் வேலேகளை முடித்துத் தானே நான் ஆபீஸுக்கு வருகிறேன். இதை விட தாழ்ந்ததா அது.

ரவி: ஹூம் என்னவோ உன் கதையைக் கேட்க பரிதாப மாகத்தான் இருக்கிறது.

சுந்த: ரவி நீ பாக்கியசாலி. உன் மனைவியிடம் இதை எல்லாம் எதிர்பார்க்க முடியாது. போய் வருகிறேன். (போய் விடுகிருன்)

ரவி: (தனிமையில்) ஆ...ஹா இவளே விட என் மனைவி எவ்வளவோ உயர்ந்தவள். கணவனின் சுகதேவைகளை நன்கு அறிந்தவள். இவளிடமா எனக்கு வெறுப்பு. இல்லே இன்றிலிருந்து நான் அவளிடம் அன்பாக இருப்பேன். (ரவி ஆபீஸிலிருந்து நான்கு மணிக்கெல்லாம் வீடு திரும்புகிருன்.)

3

ரவி: (சந்தோஷமாக) கண்ணம்மா...கண்ணம்மா.

கண்: (பெருக்கிக் கொண்டிருப்பவள் அப்படியே ஒடி வருகிருள்) என்னுங்க கூப்பிட்டீங்களா?

ரவி: ஆமாம் உன்னே மட்டும் தான் கூப்பிட்டேன். கையிலே இருக்கிறதை அப்படி வைத்து விட்டு வா.

கண: எது. வரும் போதே இத்தனே அமர்க்களம்.

ரவி: அதெல்லாம், அப்புறம் சொல்லுகிறேன். மீனு எங்கே?

க: மீனு குயின்மேரி காலே ஜிக்கி போயிருக்கு இன்னும் வரலே.

ரவி: (சிரித்துக்கொண்டே) சரி, சரி நீ போய் உடுத்திக்கோ மீனுவும் வரட்டும் எல்லோரும் பிக்சருக்குப்போகலாம்.

க: ஹா...நான் வரலே (அழுகிருள்)

ரவி: கண் ... ண...ம்மாஏன் வரலே? ஆமாம் எதுக்காக அழுரே?

கண்: எங்கப்பட்டிக்காட்டிலிருந்துப்போ ஒருநாளும் நான் பிச்சை எடுத்ததில்ல. நீங்க என்னடான்னு பிச்சை எடுக்க கூப்பிடிரீங்களே நல்லாயிருக்கா?

ரவி: (கேலியாக) அடிப் பைத்தியமே! பிச்சை எடுக்க இல்லே. சினிமாப்பார்க்க ஹூம் சீக்கிரம் வா.

கண்: இதை முதலே சொல்லக்கூடாதா என்னே அழவைக்கனும்னு ஆசையா? அதோ மீனு கூட வருகிருளே.

மீனு: என்னன்னு என்னேப் பற்றி பேசுரீங்க,

ரவி: ஒன்னுமில்லே மீனு. நம்பல்லாம் சினிமாவுக்கு போகலாமன்றுதான் பேசுகிறும்.

மீனு: ஓ போகலாமே: ஏன் அண்ணிவரமாட்டேன் என்றதா?

ரவி. ஹா...ஹூம் வருகிருளாம். அலங்காரம் பண்ணிக்கிறதுதான் எப்படின்னு தெரியலேயாம்.

மீனு: அந்தக் கவலே ஏன். நான் இருக்கேனே. வா அண்ணி (உள்ளே போகிருர்கள்).

கண்: மீனு அதிகப்படியான அலங்காரம் ஒன்றும் வேண்டியதில்லே: சும்மா சாதாரணமாய் இருக்கட்டும்.

மீனு: சரி எங்கே கொஞ்னும் வாயைத்திற பார்க்கலாம்

கண்: ஏன் இந்த சாயத்தை வாயிலே போடப்போரியா?

மீனு: ஹூம்...ஹூம் இதை ஒதட்டிலே லேசா பூசணும்.

கண்: ஐயையோ, இதைப் பூசிக்கிட்டு போனு பார்க்கிறவங்க மனிதகுரங்கு வந்திருக்குன்னு இல்லே நினேப்பாங்க.

மீனு: நீ பேசாம இரு அண்ணி. இது தான் பட்டணத்திலே நாகரிகம்.

கண்: நாசமாப் போச்சிபோ. இது ஒரு நாகரீகமா!

ரவி: ஏ மீனு இன்னுமா அலங்காரம். சீக்கிரம் வாங்க.

மீனு: இதோ வந்துட்டேன். வா அண்ணி போகலாம்.

ரவி: இதோ பார் கண்ணம்மா இப்போ. நம்ம சினிமாவுக்குப் போகிறோம். அங்கே வந்து ஒண்ணு சொல்ல ஒண்ணு உளறி வைக்கர்தே தெரியுமா.

கண்: சரீங்க. நான் வாயேத் திறக்கவே. மாட்டேன் போதுமா. (மூன்று பேரும் போகிருர்கள்.) ரவி வழியிலே ஒரு சிநேகிதனே சந்திக்கிருன்).

நண்: ஹலோ மிஸ்டர் ரவி உங்களேப்பார்த்து ரொம்ப நாளாச்சு என்ன சௌக்கியந் தானே.

ரவி: சௌக்கியந்தாங்க.

நண்: எங்கே சினிமாவுக்கு போரிங்களா. போயிட்டுவாங்க. இன்னொரு நாளேக்கு பேசலாம். (போய் விடுகிருன்).

கண்: என்னுங்க அவரு அல்வா மிக்சர் விக்கிருருபோலருக்கே. வாங்கக் கூடாதா? சினிமாக் கொட்டாயிலே போய் சாப்பிடலாமே, (மீனுசிரிக்கிருள் ரவிக்குக் கோபம் வருகிறது).

ரவி: கண்ணம்மா! உனக்கு என்ன சொன்னேன்பேசாமவர மாட்டே உங்க ஊரு கூத்து கொட்டான்னு நினேச்சயா?

மீனு: அண்ணு, அண்ணி தெரியாம சொல்லிடுது. அதுக்காக நீங்க இப்படி இரையரது நல்லால்லே. (பிறகு மௌனமாகச் சென்று சினிமாப் பார்த்து விட்டு வீடு திரும்பினர்.)

(சில வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் சுந்தரம் ரவியைத் தேடி வருகிறான்.)

சுந்த: ரவி இருக்காருங்களா.

கண் : உட்காருங்க இதோ வந்திடுவார். (ஹாலில் உட்கார வைத்து விட்டு உள்ளே வருகிருள்) என்னுங்க உங்க ப்ரண்ட் மிஸ்டர் சுந்தரம் வந்திருக்கார் போய் பாருங்க.

ரவி : கண்ணம்மா!

கண் : ஹாம் ...... ஹாம் அவர் காத்திருக்கிருர் போங்க.

ரவி : என்ன மிஸ்டர் சுந்தரம் விஷயம் ஏதாவது கொண்டுவந்தியா?

சுந்த : விஷய மென்னப்பா விஷயம் எல்லாம் பழைய பல்லவிதான். என்னம்மோ உன் கிட்ட கொஞ்சம் பேசிட்டு போகலாமென்று வந்தேன்.

கண்: விஷயமெல்லாம் பிறகு பேசலாம். முதலில் காப்பி சாப்பிடுங்க.

ரவி: ஆமா சுந்தரம் விஷயமெல்லாம் இன்னொரு நாளைக்கு. பேசலாம் முதலில் காப்பி சாப்பிடு.

சுந்த : (காபி குடித்துவிட்டு) அப்போ, நான் போய் இன்னொரு நாளைக்கு வருகிறேன்.

ரவி : (கண்ணம்மாவிடம் வந்து) கண்ணம்மா! என் பட்டிக்காட்டு கண்ணம்மா எங்கே போய்விட்டாள்?

மீனு : (வந்து கொண்டே) அவள் எங்கும் போய்விடவில்லை அண்ணு. பட்டணத்து கண்ணம்மாவாக ஜொலித்து கொண்டிருக்கிருள். அவள் எப்படி போகமுடியும் நீங்கள் தான் நான்கு பக்கமும் சுவர் மாதிரி நின்று கொண்டிருக்கிறீர்களே.

ரவி: (பொய் கோபத்தோடு) ஹு...என்ன சொன்னே (காதை பிடித்து திருகுகிருன்)

கண்: போதும் விடுங்க. (தடுக்கிருள்) உம்......மீனு டைம் ஆச்சு நீ காலேஜிக்குப் போ.

மீனு: பயந்தபடி எந்த காலேஜிக்கு அண்ணி (இருவரும் சிரிக்கிருர்கள் மீனு ஓடிவிடுகிருள்)

ரவி : கண்ணம்மா!

கண் : ஹா...ம்

ரவி : ஒரு சந்தேகம்.

கண் : சந்தேகமா? என்ன அது சொல்லுங்க.

ரவி: நீ ஆளே மாறிவிட்டாயே உனக்கு என்மீதுள்ள அன்பு மாறுமோ என்றுதான் பயமாயிருக்கு.

கண்: (சிரித்துக்கொண்டே) பயப்படாதீங்க உண்மையான அன்பு என்றுமே மாருது...... ஹீ...நான் ஒன்று சொல்லட்டுமா?

ரவி : என்னது சீக்கிரம் சொல்லு.

கண்: இன்னிக்கு ஏதாவது பிக்சருக்கு போகலாமா.

இந்தியா - அமெரிக்கர் நெருங்கிய உறவுகள்.

அமெரிக்கா முழுவதும் பலவேறு துறைகளையும் சேர்ந்த லட்சக் கனக்கான அமெரிக்கர், இந்தியத் தூதர் எம். ஸி. சாக்ளாவும் அவர் மனைவியாரும் இங்கு இந்தியத் தூதரகத்தில் எட்வர்ட் ஆர். மர்ரோ என்பவருக்கு வெள்ளிக்கிழமை இரவு அளித்த பேட்டியை டெலிவிஷனில் கண்டு களித்தனர்.

இந்தியாவின் குறிக்கோள்கள், அபிலாஷைகள், அமெரிக்காவையும் அமெரிக்க மக்களையும் பற்றிய தம் கருத்துக்கள் ஆகியவற்றைப் பற்றியே சாக்ளா அதிக நேரம் பேசினார். முக்கியமாக ஒலிபரப்பைக் கேட்கும் அந்த நேரத்தில் அந்த நிகழ்ச்சியை 5 கோடி அமெரிக்கர் பார்த்திருப்பர் என்று மதிப்பிடப்படுகிறது.

இராணுவ உடன்படிக்கையைவிட நெருக்கமான உறவு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உண்டு என்று சாக்ளா குறிப்பிட்டார். "இராணுவ ஒப்பந்தங்களை விட வன்மையான பிணைப்புகளால் இந்தியாவும் அமெரிக்காவும் இணைக்கப்பட்டுள்ளன. ஜனநாயகம், சுதந்தரம், மனித மாண்பு, கடவுள் நம்பிக்கை என்பவையே அப் பிணைப்புகள்" என்று அவர் கூறினார்.

ரவி: ஐய்யய்யோ பிச்சை எடுக்கறத்துக்கு நான் வரமாட்டேன்.

கண்: ஐயோ போதுமே பரிகாசம், டிபன் ஆறிப்போகுது சாப்பிடலாங்க.

தாய்: (வந்துகொண்டே) பார்த்தாயா ரவி உன் மனைவி இப்பொழுது சமர்த்தாயிட்டால்லே?

ரவி: அப்பமட்டும் என்னம்மா. சமர்த்தாதான் இருந்தாள். நான்தான் அவள் குணத்தை புரிந்துகொள்ளவில்லை.

மீனு: அண்ணா ஒரு பைத்தியமா ஆயிடுத்து அண்ணி மேலே சொக்கி, சொக்கி என்ற பாடலே பாடிக்கொண்டே வருகிருள். (எல்லோரும் சிரிக்கிருர்கள்).

*

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி-சார்மினர் பிராண்ட்

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில் ரெடி ஸ்டாக்குகள் உள்ளன.

* 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
* தி சிமிண்ட் கான்கிரீட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
* 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
* 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
* 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
* "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை
* 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
* 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
* 139, சூளை ஹைரோடு, சென்னை.
* 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
* 395, பிராட்வே, பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது சென்னை.

N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு,

சென்னை-1.

தபால் பெட்டி நெ. 1893

போன் : 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள் : டாடா. S & L ஜி. ஐ பைப்புகள் : எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

இந்தியாவில் கண்ணாடி மண்பாண்டத் தொழில்

இந்தியாவில் புதிதாக ஏற்பட்டு வளர்ந்துவரும் தொழில்களில் முக்கியமான ஒரு தொழில் கண்ணாடி மண்பாண்டத் தொழிலாகும். சமீப மதிப்பீட்டின்படி கண்ணாடி மண்பாண்ட உற்பத்திகளின் வருஷாந்தர மதிப்பு முறையே 3.5 கோடி ரூபாயும், 1.3 கோடி ரூபாயுமாகும்.

சென்ற வருஷம் கண்ணாடியின் உற்பத்தி மாத்திரமே முந்திய வருஷ உற்பத்தியை விட 13% அதிகரித்திருக்கிறது. கண்ணாடிப் பாளம், தர்மாஸ் பிளாஸ்க், புட்டி வகையரு ஆகிய இனங்கள் விஷயத்தில் இந்த அதிகரிப்பு விசேஷ ரீதியில் இருந்தது.

ஆயினும், தற்போதைய அதிகரிப்பு வேகம் கண்ணாடி, மண்பாண்டம், பீங்கான் வகையருக்களுக்கு இருந்துவரும் தேவையைச் சமாளிக்க போதுமானதாக இல்லை. இதனால், எதிர்காலத்தில் கண்ணாடி மண்பாண்டத் தொழில் வளர்ச்சியடைய பெருமளவில் ஊக்கம் இடைக்கும்.

மண்பாண்டத் தொழில் இரண்டாவது திட்டத்தில் அடங்கவில்லை. அப்படியிருந்தும் உற்பத்தி சென்ற வருஷத்தில் 18 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பு சுகாதார சாதனங்கள், வழவழப்பான குழாய்கள், ஹை டென்ஷன் இன்சுலேட்டிங் சாதனங்கள், தட்டு, கொப்பை வகையருக்கள் முதலியவைகளில் பிரதானமாய் இருந்திருக்கிறது.

இந்தத் தொழிலுக்குப் புதிய துறைகளில் தயாரிப்பு வேலை செய்ய முடியும் என்பது இந்தியாவில் முதல்தடவையாக உயர்ந்தரக பார்வைக் கருவி கண்ணாடிகள் தயாரிக்கப்பட்டதிலிருந்து நிரூபணமாகிறது. இந்த வேலை, இன்னும் இது போன்ற வேறு பல முற்போக்குகள் ஆகியவைகளுக்குக் காரணமாய் இருந்த பெருமை கல்கத்தாவிலுள்ள மத்திய கண்ணாடி மண்பாண்ட ஆராய்ச்சி நிலையத்தைச்சாரும்.

தொழில் மந்திரியிடம் பேப்ரிகேட்டர்களின் கூட்டாலோசனை

சென்னை ராஜ்ய அயர்ன் & ஸ்டீல் பேப்ரிகேட்டர்கள் சார்பில் 19 பேர் அடங்கிய தூது கோஷ்டி ஒன்று தொழில் மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்களிடம் நேரில் பேசி, பல குறைகளடங்கிய மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வமயம் டைரக்டர் ஸ்ரீ. டி. கே. பழனியப்பன். ஜாயின்ட் டைரக்டர். ஸ்ரீ. வி. எஸ். இராகவன், ஸ்டீல் ஆபிஸர் ஸ்ரீ. டி. சாமுவேல், உத்வி ஸ்டீல் ஆபி

8

ஸர் ஸ்ரீ. எம். டி. சம்பந்தம் ஆகியவர்கள் பிரசன்னமாகி இருந்தார்கள். கைத்தொழில் மந்திரி ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அதிகாரிகளையும், பேப்ரிகேட்டர் களையும் கலந்து சுமுகமான முடிவுக்கு வர ஏற்பாடு செய்ததை தொழில் பத்திரிகை பாராட்டுகிறது

———

விவசாயமந்திரியிடம் பேப்ரிகேட்டர்களின் தூது கோஷ்டி

சென்னை ராஜ்ய அயர்ன் ஸ்டீல் பேப்ரிகேட்டர் சங்கத்தின் சார்பில் 7 பேர் கொண்ட தூதுக்கோஷ்டி ஒன்று விவசாய மந்திரி ஸ்ரீ. எம். பக்தவத்சலம் அவர்களைப் பேட்டுக் கண்டது. சுமார் ஒரு மணி நேரம் பேப்ரிகேட்டர் களின் கஷ்டத்தை எடுத்துக் கூறியதும், அவர்கள் ஆவன செய்வதாக வாக்குறுதி கொடுத்தார்.

———

கேளம்பாக்கம் பள்ளியை ஸ்ரீ பக்தவச்சலம் திறந்துவைத்தார்

செங்கற்பட்டு மாவாட்டம் கேளம்பாக்கம் இராமத்தில் முன்னாள் உதவி ரெயில்வே மந்திரி ஸ்ரீ. ஓ. வி. அளகேசன் தலைமையில் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் உயர்நிலைப்பள்ளியைத் திறந்து வைத்து, பள்ளியின் அவசியத்தைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் பேசினார்; மாணவர்கள், ஒழுங்காகநடக்க வேண்டிய அவசியத்தையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினார். பிறகு ஸ்ரீ எம். முத்துசாமி நாயகர் எம். எல். ஏ. ஸ்ரீ வெங்கிட சுப்பா ரெட்டியார், எம். எல். ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

———

1200 குழந்தைகள் மலை வாசஸ்தலங்களில் இலவச சுகவாசம்

குறைந்த வருமானப் பிரிவினரின் குழந்தைகள் சுமார் 1200 குழந்தைகள் மே 1-ந் தேதியிலிருந்து ஜூலை 31-ந் தேதி வரையுள்ள காலத்தில் இலவசமாக உல்லாச சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். அவர்கள் மைசூர், உதகமண்டலம், மௌண்ட் அபு, சிம்லா, முஸ்ஸோரி, பசமாரி, பர்லா, டேராடூன் ஆகியவிடங்களில் தங்கள் விடுமுறைகளை சுகமாகக் கழித்துவருகின்றனர். குழந்தைகளுக்கு விடுமுறை விடுதிகள் ஏற்படுத்தும் புதிய பரிசோதனை ஏற்பாட்டில் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏற்பாடு மத்திய சமூக க்ஷேமநல போர்டினால் ஆரம்பிக்கப்பட்டு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. குழந்தை க்ஷேமநலனுக்கான இந்திய கௌன்சிலும், அத்துடன் இணைந்துள்ள ராஜ்ய கௌன்சில்களும் இவ்விடுதிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

படம் விமர்சனம்:

தலைகொடுத்தான் தம்பி.

செல்வபுரி இளவரசி சுந்தரவல்லி, கண்டவரைக்கவரக் கூடிய அழகு பெற்றிருந்தாள்; பவளத்தீவைச்சேர்ந்த விஜயன்மீது அவள் காதல் கொள்ளலானாள்; காதலோடு நின்றுவிடாமல், அவனைத் திருமணம் செய்துகொள்ளவும் சித்தமானாள்; அரசனிடம் அவளுடைய ஆவலை வெளியிட்டுவிடுகிறாள்; எதிர்ப்பு என்கிற சூறாவளி கிளம்புகிறது. எவ்வளவு பெரிய எதிர்ப்பு வந்தபோதிலும், காதலர்கள் இருவரும், கானகம் சென்று மணம் புரிந்து உல்லாச வாழ்க்கை வாழ்கிறார்கள்.

விஜயன் ஏற்கனவே திருமணம் ஆனவன்; இளவரசி சுந்தரவல்லியை விட்டுவிட்டு, அவன் பவளத்தீவிற்கு ஓடி விடுகிறான். அங்கே, ஒரு பெரிய சுரங்கவிபத்துக்குள்ளாகி விடுகிறான்; கைகளை இழந்து விடுகிறான். விஜயனின் முதல் மனைவி இறந்து விடுகிறாள்; சுந்தரவல்லியும், ஒரு குழந்தையை பெற்றுவிட்டு இறந்துபோய் விடுகிறாள். மூத்தமனைவி மகன் இன்பசாகரன்; சுந்தரவல்லி மகன் இந்திரஜித்; ஒரு தகப்பனுக்குப் பிறந்த இந்த இரண்டு குழந்தைகளும் பெரியவர்களாகி விடுகிறார்கள்; தன் தாயை வஞ்சித்து ஓடிய தன் தகப்பன் விஜயன் மீது, இந்திரஜித்துக்குக் கோபம் உண்டாகிறது; இந்த

ரங்கா பிக்சர்ஸாரின் விரைவில் வெளி வர இருக்கும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற படத்தில் வரும் ஒரு காட்சி.

குழப்பத்தில், அவன் தன் சகோதரனையும் எதிர்க்கிறான். இறுதியில் இந்திரஜித் உயிரைக்கொடுக்கிறான்.

மாறனின் வசனம் சில இடங்களில் பரவா இல்லை. கதையில் விறுவிறுப்புப் போதாது.

இந்திரஜித்தாக வரும் எஸ். எஸ். ராஜேந்திரன் நடிப்பு சுமாராக இருக்கிறது! கே. ஆர். ராமசாமி, கொடுக்கப்பட்ட பாகத்தை குறைவின்றி நடிக்கிறார்; மனோகர் நடிப்பு சிறப்பாக அமைந்துள்ளது; தாம்பரம் லலிதா, உணர்ச்சியோடு நன்கு நடித்துள்ளார். குலதெய்வம் ராஜகோபால் நல்லமுறையில் நகைச்சுவை விருந்தளிக்கிறார். டி. பி. முத்துலட்சுமியின் நடிப்பு பரவா இல்லை. ஒரு முறை பார்க்கலாம்.

சிவாஜி கணேசனின் தாராளம்.

நடிப்புத் துறையில் மட்டும் சிவாஜி கணேசன் முன்னணியில் நிற்கவில்லை; பரிதாபகரமான நிலையில் இருக்கும் ஏழைகளின் துயரத்தைத் துடைக்கவும் அவர் முன்னணியில் நிற்கிறார்;

சென்னை ஆழ்வார் பேட்டையில் ஒரு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது; இந்தத் தீயின் கோரத்தாண்டவத்திற்கு இருநூறு வீடுகள் பலியாயின; இரு நூறு குடும்பங்கள் வீடில்லாமல் பரிதவித்துக் கொண்டிருந்தன. இந்த தீவிபத்தைக்கேள்விப் பட்டதும், சிவாஜிகணேசன், சம்பவம் நடந்த இடத்திற்கு

ரங்கா பிக்சர்ஸாரின் விரைவில் வெளி வர இருக்கும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற படத்தில் வரும் ஒரு காட்சி.



சண்முகம்—சகுந்தலா திருமணம்

பிரபல சினிமா நடிகர் ஸ்ரீ சிவாஜி கணேசன் தம்பி ஸ்ரீ சண்முகத்திற்கும் ஸ்ரீமதி. சகுந்தலாவிற்கும் சென்ற 17-ந் தேதி நடைபெற்ற திருமணத்தின் போது எடுத்தபடம். மந்திரிகளும் பிரமுகர்களும், சினிமா நடிக நடிகைகளும். வருகை தந்து திருமணத்தை சிறப்படையச் செய்தார்கள்; அன்று 10, 000 பேருக்கு உணவு அளிக்கப்பட்டது. வாழ்க, மணமக்கள்.

விரைந்து சென்றார். வீடு இழந்தவர்களின் நிவாரண நிதிக்கு ரூ. 5000, நன்கொடையாக அவர் வழங்கியுள்ளார். லட்சக் கணக்கான பணத்தை ஏழைகளின் நலனுக்காக அவர் வாரி வழங்குகிறார்; சிவாஜி கணேசன் கலையோடு நின்று விடாமல், இப்படி ஏழைகளுக்கு உதவி செய்ய முன் வந்தது, மிகவும் பாராட்டத்தக்கது.



பாண்டியன்-ஜெயபாலாம்பிகை திருமணம்.

மணமகன் செந்தூர் பாண்டியன்; மணமகள் ஜெயபாலாம்பிகை இவர்கள் திருமணம், உமரிமா நகர் மணமகள் இல்லத்தில் 11—6—'59ல் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன.

லண்டனில் வைஜயந்திமாலா !

பாரிஸ் நகர் பத்திரிகைகளின் பாராட்டுரையைப்

பெற்று, குமாரி வைஜயந்திமாலா லண்டன் நகரம் வந்து

சேர்ந்தார்; லண்டன் ஆகாய விமான நிலையத்தில் அவருக்குக் கோலாகலமான வரவேற்பு கொடுக்கப்பட்டது. ஆசியா பிலிம் சொசைடியின் உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கான பேர், ஆகாயவிமான நிலையத்திற்கு வருகை தந்தார்கள். பத்திரிகை நிருபர்கள், கூட்டத்தை நெரித்துக்கொண்டு வைஜயந்திமாலா நிற்குமிடத்தை நோக்கிக் கொண்டு வந்த வண்ணமாக இருந்தார்கள்; கிட்டத்தட்ட பிரிட்டனிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும், முகப்பில் வைஜயந்தி படத்துடன் வெளிவந்தன.

நாட்டியத்துறையில் உலகப்புகழ்பெற்ற, ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்த "ஜோசி கிரேஸோ" என்பவர், வைஜயந்திமாலாவுக்கு பிரின்சஸ் தியேட்டரில் ஒரு தேநீர் விருந்துகொடுத்து கௌரவித்தார். பாரிஸ் நகரபத்திரிகை ஒன்று, வைஜயந்திமாலாவை. "வைரங்களால் அலங்கரிக்கப்பட்ட இந்தியக் கடவுள்" என்று பாராட்டியுள்ளது.

டி' மெல்லி வழங்கிய "பத்துக் கட்டளைகள்"

பட உலக வரலாற்றிலேயே அதிக பணம் சம்பாதித்துள்ள படம் "பத்துக் கட்டளைகள்" (Ten commandments) தான் என்று கூறுகிறார்கள். அண்மையில் காலஞ் சென்ற படவுலக மேதை செஸில் பி. டி' மெல்லி தயாரித்தது அப்படம் என்பது அனைவரும் அறிந்ததே.

இதுவரையில் உலகம் முழுவதிலும் 6 கோடிப் பேருக்கு மேல் இப்படத்தைப் பார்த்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

உலக வசூல் மொத்தம் 7½ கோடி டாலருக்கு மேல்; இதுவரை எந்தப் படமும் இவ்வளவு வசூல் தந்ததில்லை,

'பத்துக் கட்டளைகள்' படத்திலிருந்து செஸில் பி, டி'மெல்லி ஒரு 'பைஸா' கூடப்பெற்றுக்கொள்ளவில்லை என்று பாரமவுண்ட் ஸ்தாபனத்தார் கூறுகின்றனர். வருவாயில் அவர் பங்குக்குக் கிடைக்க வேண்டிய தொகை முழுதும் ஒரு அறநிலையத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி, மத, அறப்பணிகளுக்கு இப் பணம் செலவிடப்படும்.

Edited & Published by K. Perumal Udayar,
EdapalayamStreet, Madras-3. Asst. Editor: C. J. MarthandamB.A
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

ESTD: 21-3-52. **தபால் மூலம்** GOVT REGD: 3072.

இலவசக் கல்வி போதனை

'D' குரூப் வகுப்புகள் ஆரம்ப தேதி 7 - 7 - 59

தமிழ் அறிவு பெற்ற ஆண்-பெண் இருபாலரும், பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும்-தவறியவர்களும் கீழ்க் பாட 59-60'ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் இலவசமாக பாடங்களனுப்பிப் பயிற்சியளிக்கப்படும். தேர்வின் வெற்றிக்கும் பாடங்களனுப்பிப் பயிற்சியளிப்பதற்கும் உறுதிப்பத்திரம் வழங்குகிறோம். மாணவர்களின் கஷ்ட நஷ்டங்களுக்கு இப்பத்திரத்தின் மூலம் நமது இன்ஸ்டிடியூட் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

1. யுத்கல்: B. A.; 2. B. Com.; 3. I. Com.; 4. Inter; 5. மெட்ரூஸ் மெட்ரிகுலேஷன்; 6. பிரி-யுனிவர்சிடி; 7. தமிழ் வித்துவான் வகுப்புகள்; 8. சர்வீஸ் கமிஷன்; 9. S.S.L.C. (Oct. 59 & March 60); 10. E.S.L.C.; 11. கைத்தறி நெசவு; 12. விவசாயம்; 13. அக்கௌன்டன்ஸி; 14. ஓவர்சீயர்; 15. போஸ்டல் கிளார்க்; 16.போஸ்ட்மேன்;17.கிராம மணியம்&கர்ணம்; 18.ஹிந்தி வகுப்புகள்,(ஆகஸ்ட்) 19.ஹோமியோபதி(தமிழ்&ஆங்கிலம்) 20.கிராமவைத்தியம் 21.பேசிக்ஆங்கிலம்.

1952ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் மலேயா, சிங்கப்பூர், சென்னை சிலோன், ஆப்ரிக்கா முதலிய இடங்களில் கிளை நிலையங்கள் நிறுவி ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்விப் பயிற்சி அளித்துவருகிறது நமது கல்வி ஸ்தாபனம். ஆகவே 7-7-59 முதல் ஆரம்பமாகும் நமது 'D' குரூப் வகுப்புகளின் முழு விவரங்களுக்கு 15 N. P. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து நமது வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைய அன்புடன் அழைக்கின்றோம்.

நம் தாயகத்தின் தனிப்பெரும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்
ரிஷிவந்தியம் S.O. தென் ஆர்காடு Dt.
கிளைகள்: சென்னை, மலேயா, சிலோன் & தென்னாப்ரிகா.

Wrapper printed at SAMPATH PRESS, Ma[illegible]1.